JL
[illegible], N130 BV
N30·1·9
188775-

84 Regd. No. M. 2573.



# விஞ்ஞாபனம்.

செந்தமிழ்ச் செல்வர்காள்! நந்தம் பாலவித்யா முந்திய பகுதிகள் நுந்தம் பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறதன்றோ? அதனை நும் அரிய காலத்திற் சிறிதளவேனும் செலவழித்துப் படித்துப் பார்த்திருப்பீர்களென்றே நம்புகிறோம். இதுவரையில் நீவிர் அப்படிப் படிக்க முடியாதிருப்பினும் இனியாகிலும் தயவுசெய்து அவைகளையும் இப்பகுதியையும் படித்துப் பார்த்துச் சந்தாதாரராகச் சேரவும், தம் நண்பர் முதலாயினார்க்கு. எடுத்துச் சொல்லி அவர்களையும் சந்தாதாரராகச் சேரச் செய்யவும் பெரிதும் வேண்டிக்கொள்கிறோம்.

பாலவித்யா பரந்த பல நன்னோக்கங்களைக் கொண்டு ஆரம்பிக்கப் பெற்றிருக்கிறதென்பதை **வேண்டுகோள்** என்னும் தலைப்புப் பாடலாலே நாடறியச் சொல்லியுள்ளோம். எந்த நோக்கமும் மக்கள் பலருடைய ஆதரவைப் பெற்றாலன்றி நாட்டிற்பரவி நன்மை பயக்கும் நிலையை அடைய முடியாது. இதனை நீவிரும் உணர்ந்தே இருப்பீர். ஆகவே சந்தாதாரராகச் சேர்தலிலும் சேர்வித்தலிலும் மிக்க விரைவும் ஊக்கமுங் கொள்வீராயின் நம் நாட்டுக்கு எங்களை நல்ல தொண்டராக்குதலாகிய நற் காரியத்தைச் செய்தவர்கள் ஆவீர். எங்கள் தொண்டும் பல் நல்வழிகளிலே பரந்து பயன் தருவதாகும்.

“ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும்; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்.”

(கபிலர்)

**பதிப்பாளர்கள்.**

---

N.B.—சந்தா தொகையை அனுப்பி சந்தாதாரராக சேருபவர்கள் தமக்கு கிடைத்த பகுதிகள், கிடைக்கவேண்டிய பகுதிகள் விபரம் தெரிவிக்கவும்.

7 - OCT 1930
188775
சென்னை-600 008

உ

# பால வித்யா

(மாதப் பத்திரிகை)

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் "
" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு "

| தொகுதி I | 1930 ௵ ஸெப்டம்பர் ௴<br>பிரமோதூத ௵ புரட்டாசி ௴ | பகுதி IX |
|---|---|---|

ஸ்ரீ:

## கல்வியும் பயனும் (தொடர்ச்சி)

கடலூர்
தமிழாசிரியர் தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரி எழுதியது.

### (2) நூல்வழிப்படிப்பு.

இயற்கைவழிப்படிப்பிற்கு அடுத்தமுறையில் நிற்பது நூல்வழிப் படிப்பேயாம். உலகினர் பெரும்பாலும், இவ்வழி ஒன்றினையே கல்வித்துறை யெனக் கொண்டுளர். பெருமையனைத்தினையும் இத்துறைக்கே ஏற்றிக் கூறுகின்றனர். இவ்வழிமேற்கொண்டு பயில்வாரையே அறிவுடையோரெனவும் இயம்பாநிற்கின்றனர். பெருமிதமாய பொருட்செலவும், இயற்கை வழியினும், இவ்வழிக்கே செய்யப்படுகின்றது. கல்விக்கழகங்களின் உழைப்பனைத்தையும் கொண்டு வளர்வது இந்நெறியொன்றேயாகும். இவ்விதம் பகருவதால், இவ்வழியிற் பயிலுதல் எழைமையுடைத்தோவென திரிவெண்ணம் கொள்ளன்மின். நுண்ணிய இயற்கைமதி வாய்ப்புடையரல்லாதாரெவரும் இந்நெறியிற்றான் சென்று தீருதல்வேண்டும். இத்துறை வயிற்புக்குப் பயி

ல்வார் தொகை எந்நாட்டினும் ஒரு தகைத்தாயிலது. அவ்வந்நாட்டினது நாகரீகவளர்ச்சி—பொருளாதாரநிலை—அரசாங்கவூக்கம்—குடி [illegible] இன்ன பல நிலைகளைச் சார்ந்துள்ளது. மேனாடுக [illegible] பாமரர் தொகை மிக்க சுருக்கமுடைத்தெனவும், நம நாட்ட[illegible] பெருக்கமுடைத்தெனவும் புகலுகின்றனர். இக்குறையினையகற்[illegible]ப்பாடு நம்மனைவரையுமே பெரிதும் சார்ந்துள்ளது. அறிவு வளர்ச்[illegible] உடல் வளர்ச்சியினும் சீருடைத்தென்றெண்ணும் மனப்பான்மை ந[illegible] தேயத்திடை வதியும் பெற்றோருள்ளத்து நாட் பதிதலே இக்கல்வி[illegible] பேறடைதற்குக் கழி பேருதவி தரும்.

இந்நூற்[illegible] கல்வியினை வகுத்தற்கு ஒவ்வொரு நாட்டிலும் [illegible] அறிஞர்கள் ஆதியிற் பாடுபட்டுளர். இந்நூற்றுறையினைப் புதுவதாகக் காணல், ஒரு புலவனாலும், ஒரு காலத்திலேயுமானதொன்றாகாது. மக்கள் தத்தமக்கென ஒவ்வொரு பாஷையினைப் பன்னூற்றாண்டுகட்கு முன்னரே எய்தப்பெற்றமைக்கும் எண்ணிக்கையற்ற அறிவாளிகளின் தாழாவுழைப்பு முதன்மைக் காரணமாகும். தம் மனத்துட்டோன்றிய கருத்துக்களைப் பிறர்க் கறிவிப்பதற்குச் சைகைகளே வழங்காற்றிலிருந்த நாட்களும் இருந்தன. அதன் பின்னரே மொழியாறும், எழுத்தாறும், நூற்றுறையும் ஒன்றன்பின் மற்றதாக நேர்மை செய்யப்பட்டிருத்தல் வேண்டும். நூலாற்றுட் சுலமாகச் சென்றுகொண்டிருக்கும் நமக்கு முன்னை நாளாறுகளை நினைத்தல் கனவுபோற் றோன்றுமெனினும் உண்மையிதுவேயாம். உலகிடை தற்போதும் சின்னாட்டு மக்கள், சைகையளவிலும், மொழியளவிலும் நிற்கின்றனர் எனப்படும் கூற்று ஒப்பக்கூடியதேயாம். இன்னோர் எழுத்தறிவும் நூலறிவும் எய்தப்பெறுதற் கின்ன மெண்ணில் காலம் சென்றே தீருமென்பதில் ஐயமென்னே! ஆகலின், மொழிகளும் நூல்களும் ஒரே காலத்தெழுந்தனவுமாகா. அன்றியும் ஒருவராலேயே செய்யப்பட்டதொன்றுமன்று. அவற்றின் பழமையும் ஆயுளும் பல திறப்பட்டனவாயுள. மொழிவளர்ச்சிக்கும், நூல்வளர்ச்சிக்கும்—இவற்றை ஆளும் மக்களின் கல்வி யூக்கமே பெரிதும் பயனுற்றற்பாலது. ஒரு மொழி வழக்காறற்றுச் சுருங்குங் காலத்தும், அம்மொழியினின்றும் பிறந்த எண்ணிலவாய நூற்றொகுதிகள், நன்மகன், வயதும் வலிமையும் தளர்ந்த தன் பெற்றோரைப் பேணுதலொப்பப் பாதுகாத்தல் புரிகின்றன. நூற்பெருக்கம், ஒரு மொழியின் வீழ்ச்சியைத் தடுப்பதொன்றோடு நில்லாமல், அம்மொழியினைப் பற்பல வழிகளில் வளப்படுத்து முகத்தால் மொழிக்கே யுதவியாற்றியும், பல வறிஞர் தம் கருத்து நுணுக்கங்களையும், கற்பனாசக்தியையும், காலவகைகளிற் றோன்றும் நவநவமான செய்திகளையும் தெரிவித்தல் மூலமாய்ப் பயில்வார்க்குதவியும் பயக்கின்றது. எழுத்துவித்தையும், நூல் நிருமிப்பும்



ஏற்படாதிருந்திருப்பின், பல புலவர்களின் தூய கருத்துக்களையும், சீரிய ஒழுக்கங்களையும் நாம் ஒரு சிறிதும் அறிய இயலாது. மேற்கூறிய இவ்வித்தைகளை ஏற்படுத்திய இயற்கை மதியினர் பேருதவிக்கும், ஊழியத்திற்கும் நாம் நம் சிற்றறிவால் என்னே கைம்மாறு இயற்றக்கடவேம். முன்னோர் தம் உயிரினும் இக் கல்விநலத்தைக் கருதியமையாலன்றோ, உயிரினும் சீருடைய தெய்வமாகக் கல்வியை உருவகித்துக் கூறியுள்ளார். அங்ஙனமிருக்க, நாம் நமது தேச நலங்கருதியும், வேறுபல அநித்யநலங்கருதியும் செலவிடும் அவ்வளவு செல்வத்தை நம் மக்கள் கல்விநலங்கருதிச் செலவிடுகின்றோமா! ஒரு பெற்றோர், தம் மகன் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கையில் அவனின் உடலினைச் செம்மைசெய்தற்கு மருந்தளிக்கும் வைத்தியர் எவ்வளவு கேட்பினும் மனமுவந்து கொடுத்தற்கு முன்வருகின்றனர். ஆனால் அம்மைந்தன் மந்தனாயிருந்து அவனது அறிவினைச் செம்மைசெய்ய முயலும் ஆசிரியன் சிரமத்துக் கேற்ப ஊதிய முதவ மேற்கூறியாங்கு உவந்தீய ஒருப்படுவரோ. தேகத்தினை இயக்கும் துணைப்பொருள் உயிரும், அவ்வுயிரினைச் சுகப்படவைக்க வலுச்செய்வது அறிவும், அவ்வறிவினை பொலிவுறச்செய்வது கல்வியுமாம் என்பதை அறியார் எவர்? இதுபற்றியே 'கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்' தென்றனர் கல்விமான்கள். இங்ஙனம் கல்வித்துறையினையும் செம்மைப்படுத்தி, கற்குமுறைகளையும், வசதிகளையும் தந்துதவி, கற்கவேண்டுமெனவும் இடித்துரைத்துள்ள ஆன்றோர்களைத் திருப்திசெய்தற்கு நம்பால் ஒரேவழிதான் உளது. அதுதான் யாதோவெனின், தேசமாந்தரனைவரும் ஆண்,பெண் ஆகியஇருபாலரும்—பொருட்செலவு, காலச்செலவு, உழைப்பு இவற்றை எட்டுணையும் பொருட்படுத்தாது, நூற்களைச் செவ்விதின் குறையற வோதியுணர்ந்து நல்வழியொழுகுதலேயாம். இவ்விதம் செய்வதுதான், கல்விக்கெனப் பாடுபட்டுள்ளவரின் நல்லான்மாவினுக்குரிய நற்கடனாற்றுவதாகும். இதனை இவ்வளவோடு நிறுத்தி, இனி நூல்வகையினையும், கற்குமுறையினையும் பற்றி சிறிதறிவோம்.

நூற்கள் பாஷை வகையானும் அவை கூறும் பொருள் வகையானும் பலவகைப்படும். உதாரணமாகத் தமிழ்நூல், வடமொழிநூல், ஆங்கிலநூல் முதலவும்—உடற்கூறு நூல், நிலநூல், சோதிடநூல், மருத்துவநூல் முதவும் உள்ளமைகாண்க. இனி இவ்விதப் பிரிவின் வழிச்செல்லின் முடிவுகாண்டல் எளிமையாகாது. ஆதலின், எம்மொழி நூலாயினும், எவ்வழிநூலாயினும் அவற்றை இரு பிரிவுட்படுத்தலாம். அவையாவன: காரியநூலும், கருவிநூலுமாம். இவற்றுட் காரியநூலிற்றான் நாம் அறிதற்பாலனவாய பொருட்கள் செறிந்துள. என்றாலும் அப்பொருட்களை விளங்க வுணர்தற்குக் கருவிநூற்

களின் துணையும் அவசியமானதே. இலக்கணம், நிகண்டு முதலியன கருவி நூற்களாம். மற்ற விலக்கியங்களனைத்தும் காரிய நூற்களே. எழுத்துக்களும், சொற்களும், பொருட்களையும், அவற்றின் தோரணைகளையும் அறிதற்குக் கருவிகளேயாகும். கருவிநூற்கள், பிறநூற்களை யாய்ந்துணர்ந்து செய்யப்பட்டனவேயாம். அதனாற்றான், 'இலக்கியங்கண்டதற்கிலக்கணமியம்பலின்' எனவும் இலக்கியத்தினின்றெடுபடுமிலக்கணம் எனவும் மயக்க நிவர்த்தியாகக் கூறிப் போந்தனர் அறிவுடையோர். காரிய நூற்களோவெனின், இயற்கை நிகழ்ச்சிகளை யாய்ந்த நுண்மதியினர், தாம் தேர்ந்த வியல்புகளை உவமை முதலிய பலதுறைகளால் தொகுத்துரைத்தமையினின்றும் எழுந்தனவாம். சுருங்கக்கூறின், இயற்கையினின்றும் காரிய நூற்களும், காரிய நூற்களினின்றும் கருவி நூற்களும் பிறத்தலாயின வென்பது வெளிப்படை. கற்குமுறையில் கருவி நூற்றுணைகொண்டு காரிய நூலையும், காரிய நூற்றுணைகொண்டு இயற்கையியல்புகளையும் அறிதல் செந்நெறி. இவ்வகைநிற்க, முதனூல், வழிநூல், சார்புநூல் என்னும் பிரிவும் உண்டு. இப்பிரிவு முற்கூறிய காரிய கருவி நூற்கள் ஒவ்வொன்றுக்கும் உடன்பாடாவதே. தன்னறிவுதுணையாக முதலில் ஒரு புலவனால் காணப்படும் எந்நூலும் முதனூலாகும். இம்முதனூலைப்பற்றுக்கோடாக்கொண்டு, குறைத்தும் — கூட்டியும் — திரித்தும் கூறப்படுவனவே ஏனைய இரு பிரிவுகளும். இவை தவிர, ஒருசிலர், நூற்களை வைதிகநூல்—லௌகிகநூல் என இருதரப்படுத்தியுரைப்பர். கற்போருள்ளத்துக் கடவுட் கருத்துக்களை விதைக்கும் நூற்கள் வைதிக நூல். உலகக்கருத்துக்களையே விளக்கும் நூற்கள் லௌகிகநூல். இவற்றுள் இருமைக்கும் பயனளிப்பது முன்னது. பின்னது இம்மைக்கே பயனபடுவது. இவற்றுள்ளும், நீதிநூலெனவும், சமயநூலெனவும் உட்பிரிவுண்டு. நீதிநூல் எம்மதத்தார்க்கும் சம்மதமாவது. சமயநூல் அவ்வச் சமயத்தார்க்கே சிறப்புடையது. மேற்கூறியவற்றுள்ளும் நல்லநூல்—கெட்டநூல் என்பன கலந்துகிடக்கும். நூற்களின் நன்மை தின்மை அவற்றினை ஆக்கியோன் மனக்கிடக்கைப் பற்றியனவாம். கண்டனம் பற்றியும், வெகுளி குறித்தும், பொறாமைமீக்கொண்டும் எழுதப்பட்டுள்ள நூற்களில் தீமை வித்துக்கள் மலிந்துகிடக்கும். பற்றற்றும் — ஒருசார் சாயாமலும் எழுதப்படும் நூற்களே நடுவுநிலை புணர்த்தும் விழுமிய நூற்களாகும். இத்தகை நூற்களினூடுதான் நாம் பழகுதல்வேண்டும். 'நீரொழியப் பாலுண் குருகின் தெரிந்து,' நல்ல நூற்களைக் கற்றற்பாலர் மாணிடர் என்போருரையும் உணர்தற்குரியதே. இத்தகைய பிரிவுகள் எல்லாத்தேயத்து எல்லா மொழியகத்து நூலினும் இருப்பனவாகும். இனிமேல் கற்கும் முறைபற்றி ஆராய்வோம். (தொடரும்.)

---



குற்றங்களை ஒப்புக்கொள்ளும்பொழுது பக்கத்தில் அவர் இருப்பது நலமென நினைத்து, அவருக்குச்சொல்லியனுப்ப, அவர், சீச்சு சந்தேகிக்காமலிருக்கும்பொருட்டு, அம்மாறுவேஷத்துடன் வந்துசேர்ந்தார். பிறகு, எல்லோரும் மேலே செய்யவேண்டிய கார்யங்களைப்பற்றி யோஜிக்கலானார்கள்.

இவ்விதம் கால்மணிநேரம் கழிந்தது அதற்குள் கோபாலய்யரும் மற்றவர்களுடன் சேர்ந்துவிட்டார்.

இப்பொழுது நம் சீச்சுவைக் கவனிப்போம். அவன் இன்னும் தரையில் அசைவற்றுப் பிரக்கினையற்றவன் போலவே கிடந்தான். ஆனால் அவனுக்கு உண்மையில் மூர்ச்சை தெளிந்து, ஸ்மரணைவந்து, ஐந்துநிமிஷ நேரத்துக்குமேலாய்விட்டது. பிறகு அவன் செய்தது பாசாங்கே. அவன் தனக்குப் பிரக்கினைவந்ததும், ஒருதரம், மெல்லத் தன் கண்களைக் கொஞ்சம் திறந்து, பக்கத்திலிருப்பவர்களைக் கவனித்தான். எல்லோரும் மிகவும் ஊக்கத்துடன் பேசிக்கொண்டிருப்பதையும், அதன் பலனாய் ஒருவரும் தன்னைக் கவனிக்கவில்லையென்பதையும் கண்டுகொள்ளவே, அவனுக்குண்டான சந்தோஷத்திற்கு அளவில்லை. உடனே அவனுடைய மூளை வேலைசெய்ய ஆரம்பித்தது. மூளை வேலைசெய்துகொண்டிருக்கும்பொழுதே, அவனுடைய வலதுகை அவனுடைய இடுப்பை நோக்கி சென்றவண்ணமிருந்தது. இப்படி இருந்தவன் திடீரென்று ஒரே தாவலாய்த் தாவிப் பூமியில் நின்றான். அச்சமயம் அவனுடைய வலதுகையில் பளபளவென்றிருந்த கைத்துப்பாக்கி ஒன்று காணப்பட்டது.

இதைக் கண்டதும், அங்கிருந்த மற்ற எல்லோரும் அடைந்த திகிலையும் பீதியையும் நாம் சொல்லவேண்டியதில்லை. அக் கைத் துப்பாக்கியைப் பார்த்ததும், எல்லோரும் ஒருவரின்பின் ஒருவர் ஒளிந்துகொண்டார்கள். அதைக் கண்ட சீச்சு, கலகலவென்று நகைத்துவிட்டு, போலீஸ் இன்ஸ்பெக்டர் முனிசாமி நாயுடுவைப் பார்த்து,

"ஓய்! நீர் மாறுவேஷம் அணிந்துகொண்டிருந்தபோதிலும் நீர் யாரென்பது எனக்குத் தெரியும். ஏனென்றால், இம் மாறுவேஷம் அணிந்துகொள்ளும் விஷயத்தில் நீர் என்னைக்காட்டிலும் சாமார்த்தியவானாயிருக்கமுடியாது. சரி; தற்சமயம் உம்மிடமும் ஒரு கைத் துப்பாக்கி இருப்பது எனக்குத் தெரியும். ஆனால் உம்முடைய கை அதை நோக்கிச் செல்லுமானால், அதே வினாடி, சற்றும் ஈவு இரக்கமில்லாமல், உம்மை சுட்டுவிடுவேன். உஷார். எங்கே முதலில் உம்முடைய கைகளைத் தூக்கிக்கொள்ளும். ஜல்தி; ஜல்தி." என்று துரிதப்படுத்தவே, நம் நாயுடு, வேறுவழியற்று, அப்படியே செய்தார். பாவம்; அச்சமயம் அவருடைய முகத்தைக் கண்டவர் பரிதாபப்படாமலிருக்க முடியாது. பயத்தின் மிகுதியால் அது சவம்போல் வெளுக்க, அவருடைய மனதில், அவருடைய குழந்தைப் பருவத்திலிருந்து அதுவரையில் நிகழ்ந்த சம்பவங்களும், இன்னும் அவருடைய மனைவி, குழந்தைகள், மற்றுமுள்ள உறவினர்களுடைய பிம்பங்களும், ஒன்றின்பின் ஒன்றாய், சினிமாவில் படங்கள் மடமடவென்று காணப்படுவதுபோல், தோன்ற ஆரம்பித்தன.

அவருடைய பீதியையும் நடுக்கத்தையும் கண்ட சீச்சு, மேலும் நகைத்துக்கொண்டே,

"ஓய்! நீர்தாமோ என்னைப் பிடிக்கவந்த புலி? சரி; உடனே என்னைநோக்கி வாரும். உம்முடைய கைகளைத் தாழ்த்தும்பக்ஷத்தில் உஷார்." என்று அதிகாரத்துவனியில் கூறிவிட்டுச் சிலைகள்போல் நின்றுகொண்டிருந்த மற்றவர்களை நோக்கி, "எல்லோரும் ஜாக்கிரதையாயிருங்கள். உங்களில் எவனாவது நகரும்பக்ஷத்தில், அதேவினாடி அவன் பிணமாவான்." என்றான். நாயுடு தன்னிடம் வந்ததும், ஒருகரத்தால் தன் துப்பாக்கியை அவருடைய மார்பில் அழுத்திக்கொண்டு, மற்றொரு கரத்தால் அவருடைய இடுப்பிலிருந்த அவருடைய துப்பாக்கியை எடுத்துக்கொண்டான். பிறகு, அவ்விரு ஆயுதங்களையும் தன் இருகரங்களிலும் பயங்கரமாய்ப் பிடித்தவண்ணம், மறுபடியும் குலுங்



கக் குலுங்க நகைத்தான். அது முடிந்ததும், எல்லோரையும் நோக்கி,

"மறுபடியும் சொல்லுகிறேன். உங்களில் எவனாவது தன்னிடத்தைவிட்டு நகருவானாகில், அதே வினாடி தன் உயிரை இழப்பான். ஆனால், அனாவசியமாய், நான் எவருக்கும் தீங்கிழைக்கப்போவதில்லை.

சரி; இருக்கட்டும். இனி நான் தப்பி உயிருடன் வாழமுடியாதென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். இன்னும் மடத்துத்தெருவில் நடந்த கொலையை நானே செய்தேன் என்பதையும் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், அதற்காகப் போலீஸாரால் பிடிக்கப்பட்டுக் கோர்ட்டாரால் தண்டிக்கப்பட்டுத் தூக்குமரத்தில் தொங்கி உயிரைவிட எனக்கிஷ்டமில்லை. ஆகையால் இன்னும் அரைமணி நேரத்திற்குள் தற்கொலை செய்துகொள்ள நிச்சயித்துவிட்டேன். அதற்குள் நீங்கள் இஷ்டப்படும்பக்ஷத்தில், நான் செய்த மற்றக் காரியங்களையும் ஒப்புக்கொள்ளுகிறேன். தற்சமயம், என் உயிரைப்பற்றி நான் சிறிதும் கவலைப்படவில்லை. இன்னும், உங்களில் எவரையும் அனாவசியமாய்க் கொல்லும் எண்ணம் எனக்கில்லை. ஆகையால், நீங்கள் வீணில் கலவரப்படவேண்டாம்.

ஆனால் நான் சாகுமுன், என் குற்றங்களை ஒப்புக்கொள்ளப் பிரியப்படுவதைக் கண்டு, நீங்கள் எல்லோரும் ஆச்சர்யப்படலாம். அதற்குக் காரணம் இதுவே. ஒருவன் சாகும்வரையில் எப்பேர்ப்பட்ட சண்டாளனாயிருந்தபோதிலும், தன் உயிரைவிடுமுன், அதுவரையில் தான் செய்த பாபங்களை வெளியிடுவதால், ஒருவித சமாதானத்தையடையக்கூடுமென்பது எல்லோரும் அறிந்த விஷயமே. அதுவுமன்றி, தற்சமயம், இக் கொலைக் குற்றம் சாட்டப்பட்டு, மூர்த்தியென்ற அவ் வாலிபன் சிறையிலிருப்பதால், பிறகு நடக்கக்கூடிய விசாரணையில், யாதொரு சந்தேகமும் தவறுதலும் இல்லாமலிருக்கும்பொருட்டு, நான் எல்லாவற்றையும் சொல்லிவிடுவதே நலமென்று நினைக்கிறேன்.

தற்சமயம், நல்லவேளையாய், போலீஸ் இன்ஸ்பெக்டர் நாயுடுவும் இங்கிருப்பது சிலாக்கியமே.

நான் சென்னையில் ...தெருவில் மங்களம் என்ற அப் பெண்ணைக் கெடுத்த அப் பாபியைக் கண்டதும், முதலில் அவன் இவ்வூர் வக்கில் தாண்டவம்ஐயரோ என்று நினைத்து ஆச்சர்யப்பட்டேன். அவரே, அக் குழந்தையைக் கொன்றிருக்கவேண்டுமென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியுமாகையால், அவரையும் பயமுறுத்தி பணம்பறிக்கத் தீர்மானித்தேன். பிறகு, அவரும் மங்களமும் கொல்லப்பட்ட அக் குழந்தையை அவ்வீட்டிலேயே போட்டுவிட்டு வெளியே சென்றதும், நான் சின்னு என்ற என் நண்பனை, அதற்குள் அங்குவந்த, கமலத்தைப் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டு, அவர்கள் சென்ற வண்டியைப் பின்பற்றிச் சென்றேன். நான் தாண்டவம்ஐயர் என்று எண்ணிய அந்த முத்துசாமி அய்யர், மங்களத்தை அவளுடைய வீட்டில் விட்டுவிட்டுத் தன் வீட்டிற்குச் சென்றதும், அவரைப் பார்த்துப் பேசியதில், அவர் தாண்டவம்ஐயரல்லவென்பதை அறிந்ததும், எனக்குண்டான ஆச்சர்யத்திற்கு அளவில்லை. இருவரும் பார்ப்பதற்கு ஒருவரைப்போலவே இருந்ததால், உடனே என் மனதில் பல யோசனைகள் தோன்றின. இன்னும், முத்துசாமி அய்யர் மிகவும் நீசசுபாவமுள்ளவரென்பதையும், அவர் பணத்தின் பொருட்டு எதையும் செய்வாரென்பதையும் அறிந்துகொண்டேன்.

வக்கில் தாண்டவம்ஐயருடைய வீட்டில் பல விலையுயர்ந்த நகைகளுண்டென்பது எனக்குத் தெரியுமாகையால், எப்படியாவது இந்த முத்துசாமி அய்யரைக் கொண்டு, அவைகளைக் களவாட நிச்சயித்து, அதற்கு வேண்டிய ஒப்பந்தங்களை இருவரும் செய்துகொண்டோம். இவ் வேற்பாடுகளைச் செய்துவிட்டு, நான் மறுபடியும் அக் குழந்தை கிடந்த வீட்டிற்குச் சென்றபொழுது, துப்பறிபவன்போல் பாசாங்குசெய்துகொண்டிருந்த என் நண்பன் சின்னுவிடம் கமலம் அகப்பட்டுக்கொண்டு கஷ்டப்பட்டுக்



கொண்டிருக்கவே, நல்ல சமயத்தில் தற்செயலாய்த் தோன்றி அவளைக் காப்பாற்றியவன்போல் அபிநயித்தேன்.

பிறகு நான் கனகபுரிக்குத் திரும்பிவந்ததும், வக்கில் தாண்டவம்ஐயருடைய வழக்கங்களையும், அவர் வீட்டின் அமைப்பையும், அவர் அந் நகைகளை வைத்திருக்கும் பெட்டியையும், அதன் சாவியிருக்குமிடத்தையும், முத்துசாமி அய்யர் அவைகளை எடுத்துக்கொண்டு கொல்லைப்பக்கமாய் காடிகாலுவிலிருக்கும் சாவியைக்கொண்டு வெளியே நழுவ முடியுமென்பதையும், இன்னும் வேண்டிய இதர விஷயங்களையும் தந்திரமாய் விசாரித்து அறிந்துகொண்டேன். கடைசியில் கொலைநடந்த இரவு அக் கார்யத்தைச் செய்யத் தீர்மானித்தோம். அன்று காலமே, முத்துசாமி அய்யர் சென்னையிலிருந்து கனகபுரிக்கு வந்துசேர்ந்தார். அவர், அவ் வீட்டிற்குள் நுழைந்து, அந் நகைகளை எடுத்துக்கொண்டு வெளியே வர, எப்படியும் குறைந்தது மூன்று மணி சாவகாசம் ஆகுமென்றும், அக் கார்யத்தை இரவில் தான் செய்யமுடியுமென்பதையுமறிந்து அது முடியும்வரையில் வக்கில் தாண்டவம்ஐயரை எங்கேயாவது பலவந்தமாய் அடைத்துவைக்கவேண்டியது அவசியமெனக் கண்டு, அன்றுமாலை 6 மணிக்கு அவர் நகரமண்டபத்தில் டென்னிஸ் ஆடிக்கொண்டிருக்கும்பொழுது, அவரிடம் சென்று, அரசலாற்று மணலில், முத்துசாமி அய்யர் இறக்குந்தறுவாயில் கிடப்பதாகவும், அவர், தற்செயலாய், அப் பக்கம் சென்ற என்னை உடனே தாண்டவம்ஐயரை அழைத்துக்கொண்டுவரும்படி வேண்டிக்கொண்டதாகவும் சொன்னேன். தாண்டவம்ஐயருக்கு முத்துசாமி அய்யரிடத்தில் மிகவும் பிரியமுண்டென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். அவர், பதறிய மனதுடன், உடனே என்னுடன் வர, சுமார் 7 மணிக்குள் இருவரும் அரசலாற்றங்கரை வந்துசேர்ந்தோம். அதற்குள் அஸ்தமித்து எங்கும் இருள்சூழ்ந்துவிட்டது.

நிற்க, அப் பக்கம், அடிக்கடி என்னுடன் ரங்காட்டம் விளையாடும் என் சிநேகிதன் ஒருவனுடைய வீடுண்டு. அச்

சமயம் அதில், அவனைத் தவிர, வேறு ஒருவருமில்லாத தால், அம் மூன்றுமணிநேரமும், தாண்டவம்ஐயரை அவ் வீட்டில் அடைத்துவைப்பதென்று ஏற்கனவே என் நண்ப னுடன் ஏற்பாடு செய்திருந்தேன். பிறகு தந்திரமாய், நான் அவரை அதற்குள் அழைத்துச் சென்று, அவருடைய கைகால்களைக் கட்டி, வாயில் துணியை அடைத்துவிட்டு, அவருடைய உடுப்புக்களை எடுத்துக்கொண்டு, என் நண் பனை நான் திரும்பிவருமவரையில் அவரைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு வெளியே சென்றேன்.

சுமார் 7½ மணிக்கு, நான் முத்துசாமி அய்யரை பெரியதெருவில் ஒரு ஹோட்டலில் என்னைச் சந்திக்கும்படி சொல்லியிருந்ததால், அங்குச் சென்று அவரிடம் தாண்ட வம்ஐயருடைய உடுப்புக்களையும் ஒரு கடிதத்தையும் கொடுத்துவிட்டு என் வீட்டிற்குச் சென்றேன். நான் அப் படிக் கடிதம் கொடுத்ததற்குக் காரணம், அச்சமயம் அந்த ஹோட்டலில் ஒரே கூட்டமாயிருந்ததாலும், அவர் ஏற்க னவே சாப்பிட உட்கார்ந்துவிட்டதாலும் பேசமுடியவில்லை. ஆனால் அவர் செய்யவேண்டிய கார்யங்களை எல்லாம் அவ ருக்கு அன்று மாலையிலேயே சொல்லியிருந்தேன்.

அவர் கனகபுரிக்கு வரும்பொழுதெல்லாம், இரவில் படுப்பதற்காக, தாண்டவம்ஐயர், மடத்துத் தெருவில் தமக்குள்ள வீட்டின் சாவியொன்றை அவரிடம் கொடுத் திருந்ததால், அவர், அந் நகைகளை எடுத்துக்கொண்டு, என்னை அவ் வீட்டில் சந்திக்கும்படி எழுதியிருந்தேன்.

கடைசியில், நான் 12 மணிக்கு அங்குச் சென்றபொ ழுது ஆரவாரத்துடன் மழை பெய்துகொண்டிருந்தது. முத்துசாமி அய்யர் ஏற்கனவே அங்குக் காத்துக்கொண் டிருந்தார். ஆனால் அதுவரையில் என்னுடன் ஒற்றுமையா யிருந்தவர், அந்நகைகளைக் கண்டதும், எனக்குக் கொடுக்க வேண்டிய பங்கைக் கொடுக்க இஷ்டப்படாமல் கண்டபடி என்னுடன் தர்க்கம் செய்ய ஆரம்பித்தார். நான் அவ்வ ளவு சிரமப்பட்டும், அக்கார்யம் ஜயமானதும், அவர்



என்னை ஏமாற்ற எண்ணங்கொண்டதைக் காணவே, எனக் குண்டான கோபத்திற்களவில்லை. நான் பன்முறை நயத் திலும் பயத்திலும் அவருக்குச் சொல்லிப் பார்த்தேன். ஆனால் ஒன்றும் பிரயோஜனமில்லை. அவர் என் பங்கைக் கொடுக்கக் கண்டிப்பாய் மறுத்துவிட்டார்.

அவருடைய பிடிவாதத்தைக் கண்டதும், எல்லாவற் றையும் மறந்து, அச்சமயம் என்னிடமிருந்த ஒரு க்ஷவாக் கத்தியைத் திடீரென்று எடுத்து அவருடைய கழுத்தை அறுத்துவிட்டேன். அவர் மாணவஸ்தையில் தன் கால் களை உதைத்துக்கொள்ளவே, பக்கத்திலிருந்த விளக்கு உடைந்து அணைந்து போய்விட்டது. உடனே எங்கும் இருள்சூழ்ந்துகொண்டது. அதே சமயம், அடுத்த அறை யிலிருந்து, ஒருவன் பாய்ந்து வெளியே ஓடினான். (இது நம் ஆடுதுறை மணி அய்யரே யொழிய வேறல்ல.) அதைக் கண்டதும் நான் நடுங்கிவிட்டேன். பிறகு, பத றிய மனதுடன், இருட்டில் தடவியவண்ணம், அவருடைய மடியிலிருந்த நகைகளை எடுத்துக்கொண்டேன். அவரு டைய இடுப்பில் இக் கைத்துப்பாக்கியுமிருந்தது. கடைசி யில், நான் அவைகளை எடுத்துக்கொண்டு வெளியே செல் லுந் தருவாயில், அவ்வீட்டிற்குள் மற்றொருவன் நுழையுஞ் சப்தம் கேட்டது. முதலில் ஓடியவன் போலீஸ்காரர்களு டன் வருகிறானென்று நினைத்து, தயாராய் இத் துப்பாக்கி யைக் கையில் பிடித்தவண்ணம், சவம் கிடந்த அறைக்குள் பதுங்கிக்கொண்டேன். மறு நிமிஷம் நெருப்புக்குச்சி ஒன்று கிழிக்கப்பட அங்கு நிரம்பிய வெளிச்சத்தில், அப் படி வந்தது வக்கீல் தாண்டவம்ஐயருடைய மூத்த குமார னாகிய மூர்த்தி என்பதைக் கண்டதும் கொஞ்சம் சமா தானமடைந்தேன். மறுபடியும் நெருப்புக்குச்சி அணை யவே, எங்கும் இருள் சூழ்ந்துகொண்டது. உடனே ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து வெளியே ஓடினேன்.

பிறகு, மேலே என்ன செய்வதென்று தோன்றாமல், பைத்தியம் பிடித்தவன்போல், தாண்டவம்ஐயர் அடைக்

கப்பட்டிருந்த வீட்டைநோக்கிச் சென்றேன். நான் முன் யோசனையில்லாமல், தாண்டவம்ஐயரை நகரமண்டபத்திலிருந்து ஏமாற்றி அழைத்துப்போனபொழுது, மாறுவேஷமின்றி, என் சுயரூபத்திலிருந்ததாலும், இன்னும் அதேரூபத்தில் நான் முத்துசாமி அய்யரைக் கொலைசெய்யும்பொழுது, மற்றொருவன் பார்த்துவிட்டதாலும், இக்கேஸ் ஒருவழியாய் முடியும்வரையில், மாறுவேஷத்துடனிருக்க நிச்சயித்தேன். இன்னும், நான் தாண்டவம்ஐயரை விட்டுவிடும்பக்ஷத்தில், அவர், முத்துசாமி அய்யர் கொலை செய்யப்பட்டதையும் தம் வீட்டு நகைகள் காணாமற்போனதையும் அறிந்ததும், என்னைக் கண்டிப்பாய் பிடித்துவிடுவாரென்று பயந்து, அவரையும் கொன்றுவிடவேண்டியது அவசியமாயிருந்தது. ஆகவே, அவரையும் ஒழித்துவிடத் தீர்மானித்தேன். அவர் அச்சமயம் அடைக்கப்பட்டிருந்த வீட்டின் தோட்டத்தில் ஒரு பாழுங்கிணறு உண்டென்பது எனக்குத்தெரியுமாகையால், அதில் அவரை உயிருடன் தள்ளி அதன் பக்கத்திலிருந்த சுவர்களை இடித்து அதைத் தூர்த்துவிடத் தீர்மானித்தேன். எனவே, அவ்வீட்டையடைந்ததும் நான் என் எண்ணத்தை என் நண்பனிடம் தெரிவிக்கவே, அவன், முதலில் பயந்தபோதிலும், பிறகு சம்மதித்தான். உடனே ஒருமணி நேரத்திற்குள் அவருடைய காரியத்தையும் முடித்துவிட்டோம். (இதைக் கேட்டதும், தாண்டவம்ஐயருடைய புதல்வனாகிய ராஜேந்திரனுடைய மனோநிலைமையை நம் நேயர்களே ஊகித்துக்கொள்ளவேண்டும்.)

பிறகு மேலும் யோசிக்கலானேன்.

மறுநாட்காலை, நான், தற்செயலாய், சந்நியாசித்தெருவில் தாண்டவம்ஐயருடைய மூத்த குமாரன் மூர்த்தியின் வீட்டுப்பக்கம் ஒரு சாமியாரைப்போல் வேஷம் போட்டுக்கொண்டுபோனபொழுது, அவன் மாடியில் ஒரு அறையில் நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன். இன்னும், அவன் அச்சமயம் அணிந்துகொண்டிருந்த துணிமணிகளில் இரத்தக்கறை எதேஷ்டமாயிருப்பதைக்கண்டதும், என்மனதில்



மறுபடியும் ஒரு யோசனை தோன்றியது. எப்படியாகிலும், அவனையும் பயமுறுத்திப் பணம் பறிக்கத் தீர்மானித்தேன். அவன் முதல் நாள் மாலை, கடைத்தெரு ராமராவ் கடையில், சில பட்டுக் கைக்குட்டைகளை வாங்கும்பொழுது நான் பார்த்திருந்ததாலும், அவைகளிலொன்று கொலை நடந்த இடத்திலிருந்து போலீஸ் இன்ஸ்பெக்டரால் கண்டெடுக்கப்பட்டதைப் பிறகு நான் அறிந்துகொண்டதாலும், அவனைப் பயமுறுத்துவது எளிதாயிருந்தது. சற்று நேரத்திற்கெல்லாம், மூர்த்தி கீழே வந்து, மடத்துத்தெருவை நோக்கிப் போகவே, அவன் கொலை நடந்த வீட்டிற்கே போகிறானென்பதை ஊகித்து, எப்படியாவது அத்துணிகளைக் களவாடும்பொருட்டு, நல்ல வேளையாய் என்னிடமிருந்த ஒரு மறு சாவியை உபயோகித்து, அவ்வீட்டிற்குள் நுழைந்தேன். நான் அவனை அத்துணிமணிகளுடன் கண்ட 10 நிமிஷ நேரத்திற்கெல்லாம், அவன் வெளியே போய்விட்டதால், அவைகள் எப்படியும் என்னிடம் சிக்கும் என்று நம்பினேன். நான் எதிர்பார்த்தது போலவே, அவன் அவைகளை ஒருபெட்டியில் ஒளித்துவைத்திருந்தான். பிறகு அவைகளையெடுத்துக்கொண்டு, ஒரு அனுமதேயக் கடிதமெழுதி, அங்கிருந்த மேஜைமேல் வைத்து விட்டு, மறுபடியும் வெளிக்கதவைப் பூட்டிக்கொண்டு போய்விட்டேன்.

நான் மாறு வேஷத்துடன் என் வீட்டிலிருப்பது முடியாத காரியமென நினைத்து, ஊருக்கு வெளியே ஒருசந்தில் ஒருவீட்டை அமர்த்திக்கொண்டேன். அன்று இரவு நான் எதிர்பார்த்த பிரகாரம், மூர்த்தி அங்கு வரவே, நான் ஏற்கனவே தயார்செய்துவைத்திருந்த சில பத்திரங்களில், அவனைப் பயமுறுத்திக் கையெழுத்துப் போடும்படி பலவந்தம் செய்தேன். அப்பத்திரங்கள் தற்சமயம் என் வீட்டில் ஒரு பெட்டியிலிருக்கின்றன. அத்துடன், என் சாமியார் வேஷத்துக்கு வேண்டிய உடுப்புக்களுமிருக்கின்றன.

வர வர, என் பயமும் குறைந்துகொண்டே வந்தது. ஏனென்றால், நான் கொலைசெய்தபொழுது பார்த்துக்

கொண்டிருந்தவன், அதுவரையில், வெளிவராமலிருந்ததால் அவனும் பயப்பட்டு, ஓடிவிட்டானென்று எண்ணினேன். எனவே, நடுவில் சிலசமயம் என் வீட்டிற்குப் போக ஆரம்பித்தேன். அச்சமயங்களில், பலதரம் என் தாயார், என் வேஷத்தைக்கண்டு, காரணங்கேட்க, பல தப்புச்சால்ஜாபுகளைச் சொன்னேன்.

நிற்க, நான், முத்துசாமி அய்யரிடமிருந்து, அபகரித்துக்கொண்டுவந்த நகைகளை பார்ப்பவர் சந்தேகிக்க நியாயமில்லாத இடத்தில் ஒளித்துவைக்கும்பக்ஷத்தில் ஜாக்கிரதையாயிருக்குமென்று நம்பி, நான் சாமியார் வேஷத்துடனிருந்த அவ்வீட்டில் ஒரு அழுக்குத் தலையணைக்குள் ஒளித்துவைத்திருந்தேன். ஆனால் கள்ளனில் குள்ளன் பாய்ந்தான் என்பது போல், எவனோ அவைகளை அடித்துக்கொண்டு போய்விட்டான். இதை நான் நேற்றுத்தான் அறிந்தேன். அதைப்பற்றி இப்பொழுது கவலையில்லை.

நிற்க, நான் மூர்த்தியிடமிருந்து அப்பத்திரங்களை எழுதி வாங்கியதற்குக் காரணம், அவன் கண்டிப்பாய், தன் தந்தையின் சொத்தில் பாதிபாகமடைவானென்று நம்பினேன். ஆகவே, பிறகு தாண்டவம்ஐயர் எழுதிவைத்திருந்த ஒரு உயிலின் பிரகாரம் அவனடையக்கூடியது ஒன்றுமில்லையென்பதை அறிந்ததும், அது வாஸ்தவமானதல்லவென்று ரூபிக்க ஏற்பாடுசெய்தேன். ஆனால் அதே இரவு மூர்த்தி கைதுசெய்யப்பட்டுவிட்டான். அவனைக் காட்டிக்கொடுத்தது யாரென்பது எனக்கு இன்னும் தெரியாது. சரி; இதைப்பற்றி மேலும் நான் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை.” என்று சீச்சு, தன்பேச்சை நிறுத்திக் கோபாலய்யரை நோக்கி,

“ஐயா! நீர் என்னை மன்னிப்பீரென்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும், உம்முடைய மனைவியாகிய காமாக்ஷி என்னால் கெடுக்கப்படவில்லையென்பதைச் சத்தியமாய்ச் சொல்லுகிறேன். ஆகையால், நீர் அவளை அனுவசியமாய்க் கஷ்டப்படுத்தாமலிருக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.” என்றான். பிறகு அவன்,



“நான் சொல்லவேண்டியது மற்றொருவிஷயமுண்டு; உம் வீட்டுச் சமையற்காரி அகிலாண்டம்மாளையும் கொன்றது நானே. அவள் காமாக்ஷியின் இரஹஸ்யத்தை எப்படியோ அறிந்துகொண்டு, நினைத்தபொழுதெல்லாம், அவளை ஹிம்சிக்க ஆரம்பித்தாள். தவிர, அவளுக்கு என் சூது முழுமையும் தெரியும். ஆகவே, அவள் உள்ளதைச் சொல்லிவிடும்பக்ஷத்தில், நான் காமாக்ஷியிடமிருந்து பணம் பறிப்பது முடியாத கார்யமென நினைத்து, அவளை ஒழித்துவிட்டேன்.” என்றான்.

மறுபடியும் சீச்சு தன் பேச்சை நிறுத்திக் கொஞ்ச நேரம் மௌனமாயிருந்தான். அச்சமயம் அவன் மனதிலிருந்ததை நாம் சொல்லமுடியாது. ஆனால் அவனுடைய முகம் மாறியிருந்ததுமன்றி, அவனுடைய நேத்திரங்களில் நீர் தளும்பிக்கொண்டிருந்தது. அந்தோ! ஒருவன் தன் உயிரை இழப்பது லேசான கார்யமோ? பிறகு, அவன்,

“சரி; என் காலம் முடிந்துவிட்டது. மேலும், பேச எனக்குச் சக்தியில்லை.” என்று சொல்லிக்கொண்டே, கைகூசாமல் தன் வலதுகரத்திலிருந்த துப்பாக்கியைத் தன் மார்புக்கெதிரில் பிடித்துக்கொள்ளவே, காமாக்ஷியும் கமலமும் வீறிட்டலறினார்கள். மறுவினாடி வெடிச் சப்தம் கேட்டது.

அரைமணி நேரத்திற்குள், சீச்சு சவமானான்.

## அத்தியாயம் 16.

இதற்கு முந்திய அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்த மறுநாட்காலை சுமார் 10மணி இருக்கும்.

வக்கில் தாண்டவம்ஐயருடைய வீட்டில் அனைவரும் துக்கசாகரத்தில் மூழ்கியிருந்தனர் என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. கொலைசெய்யப்பட்டது முத்துசாமி அய்யர் என்பதை அறிந்ததும் அவர்களெல்லோரும் ஒரு

கால் தாண்டவம்ஐயர் உயிருடனிருக்கலாமென்று மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தார்கள். ஆகவே, சீச்சு தன் குற்றங்களை ஒப்புக்கொண்டதிலிருந்து, அவரும் உயிருடன் கிணற்றில் தள்ளிப் புதைக்கப்பட்டாரென்பது வெளியானதும், ராஜேந்திரனும் ஜானகியும் பிறர் எவ்வளவோ தேற்றியும் சிறிதும் தேறாமல் துடித்துத் தவித்துக்கொண்டிருந்தார்கள். சபேசனும் அவனுடைய தங்கை ராஜமும் இன்னும் அவ்வீட்டிலேயே இருந்துவந்தார்கள்.

நாம் சொல்லும் சமயம், தோழர்களிருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். ஜானகி, தன் தமையன் பக்கத்தில் நின்றுகொண்டு, தேம்பித்தேம்பி அழுதுகொண்டிருந்தாள். அச்சமயம் வண்டிக்காரப் பொன்னம்பலம் அங்குவந்து, ராஜேந்திரனை நோக்கி,

“ஸ்வாமி! உங்களைப் பார்க்கும்பொருட்டு, ஒருவர் வெளியே காத்துக்கொண்டிருக்கிறார்.” என்று கூறவே, ராஜேந்திரன் வந்தவரை அழைத்துவரும்படி உத்தரவிட்டான். சற்றுநேரத்திற்கெல்லாம் சுமார் 30வயதுள்ள ஒருவன் அங்குவந்து, மரியாதையுடன் நமஸ்கரித்துவிட்டு,

“ஐயா! உங்களில் ராஜேந்திரன் என்பவர் யார்?” என்று கேட்க, ராஜேந்திரன் வியப்புற்று,

“ஏன்? என்னுடைய பெயர்தான் ராஜேந்திரன். என்ன வேண்டும்?” என்று வினவினான். வந்தவன்,

“ஸ்வாமி! நான் ஒரு மிகவும் நல்லசெய்தி கொண்டு வந்திருக்கிறேன். உங்களுடைய தந்தையாகிய தாண்டவம்ஐயர் என் வீட்டிலிருக்கிறார். நீங்கள் உடனே வருவீர்களானால், அவரை அழைத்துக்கொண்டு வரலாம்.” என்றான்.

இதைக் கேட்டதும், தோழர்களிருவரும் அப்படியே தங்களுடைய நாற்காலிகளிலிருந்து குபீரென்று பாய்ந்து பூமியில் நின்றார்கள். ராஜேந்திரன் தன் வாயைத் திறந்து பேச ஐந்துநிமிஷ நேரத்துக்குமேலாய்விட்டது. பிறகு, பிரமையுடன் தன் நண்பனைப் பார்த்து,



“சபேசா! இவன் சொல்லுவதை என்னால் நம்பமுடியவில்லையே.” என்றான். சபேசனும் உடனே விடையளிக்கவில்லை.

அவர்களுடைய சந்தேகத்தைக் கண்ட வந்த அந்த அந்நியன்,

“ஸ்வாமி! நான் சொல்லுவது உண்மை. நீங்கள் சிறிதும் சந்தேகப்படவேண்டாம். அவர் சென்ற சுமார் பத்து தினங்களாக, தன் சுயநினைவற்று, என் வீட்டிலிருக்கிறார். இன்று காலையில் எட்டுமணிக்குத்தான் அவர் யாரென்பதை நான் அறிந்துகொள்ள முடிந்தது. அவர், தற்சமயம், தம் புதல்வனையும் புதல்வியையும் பார்க்க மிகவும் ஆவலுடனிருப்பதால், தாமதம் செய்யாமல் வாருங்கள். போய்க்கொண்டே விபரங்களைச் சொல்லுகிறேன்.” என்றான்.

சபேசன், தன் நண்பனைப் பார்த்து,

“ராஜேந்திரா! நாம் தெய்வத்தை நம்பியவர்கள். அவரை நம்பியவர்கள் கைவிடப்படமாட்டார்கள் என்பது வசனம். வாவா; இவனுடன் போய்ப் பார்ப்போம்.” என்றான். ஆனால் ராஜேந்திரன் அசைவற்றுச் சிலைபோல் நின்றான்.

இதற்குள், அவ் வீட்டு வேலைக்காரர்களெல்லோரும் அங்குவந்து கூடிவிட்டனர். சபேசன், பொன்னம்பலத்தை நோக்கி,

“அடே! உடனே வண்டியைக் கொண்டுவா.” என்று சொல்லிவிட்டு, மறுபடியும் வந்தவனைப் பார்த்து,

“அப்பா! நீ யார்? அவர் உன்னுடைய வீட்டுக்கு வரவேண்டிய காரணமென்ன?” என்று வினவ, வந்தவன்,

“ஸ்வாமி! நான் யாரென்பதை அறிய நீங்கள் ஒருகால் என்மீது கோபிக்கலாம். ஆனால் நான் செய்த காரியத்தைக் கேட்டதும், நீங்கள் என்னை அவசியம் மன்னிப்பீர்கள். நான் சீச்சு அய்யரின் சிநேகிதன். அரசலாற்றின் சமீபத்தில் எனக்கு வீடு...” என்று அவன் மேலே பேசுமுன், சபேசன்,

"என்ன? சிச்சுவின் சிநேகிதனா?" என்று கூவினான்.

சிச்சு, தன் குற்றங்களை ஒப்புக்கொண்டபொழுது, அரசலாற்றின் சமீபத்தில் தன் நண்பன் ஒருவனுடைய வீடு உண்டென்றும், அவ் வீட்டின் தோட்டத்திலிருந்த ஒரு பாழுங் கிணற்றில் தாண்டவம்ஐயரை உயிருடன் தள்ளிப் புதைத்ததாகவும் சொன்னதை நம் நேயர்கள் மறந்திருக்கமாட்டார்களென்று நம்புகிறோம்.

அச்சமயம், அங்கிருந்த எல்லோருக்குமுண்டான ஆச்சர்யத்தையும் சந்தோஷத்தையும் நாம் வர்ணிக்கப் பிரயத்தனப்படுவதில் பிரயோஜனமில்லையாகையால் விட்டுவிடுவோம்.

பிறகு வண்டி வந்ததும், சபேசன், ராஜேந்திரன், ஜானகி, வந்த அந்நியன், இவர்களெல்லோரும் அதிலேறிக்கொண்டு சென்றனர். அவ்வீட்டு வேலைக்காரர்களில் சிலர் கால்நடையாய் அனுப்பப்பட்டனர். அதில் சமையற்காரக் கிருஷ்ணன் ஓடினானென்றே சொல்லவேண்டும்.

வழியில் சிச்சுவின் தோழன் கூறியதாவது:—

"கொலைநடந்த தினம் இரவு 7 மணிக்கு, சிச்சு, அவரை என் வீட்டில் அடைத்துவிட்டுப்போனவன் மறுபடியும் சுமார் ஒருமணிக்குத் திரும்பியபொழுது, அவரை உயிருடன் என் தோட்டத்திலிருக்கும் ஒரு பாழுங்கிணற்றில் தள்ளிப் புதைத்துவிடவேண்டுமென்று கூறவே, நான் திடுக்கிட்டு முதலில் கண்டிப்பாய் மறுத்துவிட்டேன். ஆனால், அவன் நான் சம்மதிப்பேனாகில் எனக்கு ரூபாய் 500 தருவதாகச் சொல்லவே பணத்தின்மேல் ஆசைகொண்டேன். இருந்தபோதிலும், எப்படியாவது, அவரைக் காப்பாற்ற நிச்சயித்தேன். ஆகவே, நாங்கள் அவருடைய இடுப்பில் ஒரு கயிற்றைக்கட்டி, அவரை மெல்ல அக் கிணற்றுக்குள் இறக்கி, அக் கயிற்றையும் அதற்குள் எறியுந்தறுவாயில், நான், திடீரென்று சிச்சுவை நோக்கி,

"ஸ்வாமி மறந்தே போய்விட்டோம். வாசற்கதவைத் தாளிடவில்லை. முதலில் அதைச் செய்துவிட்டுவாரும்,"



என்று கூறவே, அவனும் நம்பி வீட்டிற்குள் ஓடினான். அவன் திரும்பிவருவதற்குள், நான் மிகவும் சிரமப்பட்டு அவரை மறுபடியும் மேலே தூக்கி, பக்கத்திலிருந்த ஒரு மாட்டுக் கொட்டிலில் போட்டுவிட்டேன். பிறகு சிச்சு அங்கு வந்ததும், நான் கயிற்றைக் கிணற்றில் போட்டுவிட்டதாகச் சொல்லவே, பக்கத்துச் சுவர்களை இடிக்கலாரம்பித்தோம். எனவே, சிச்சு, அவர் புதைக்கப்பட்டுவிட்டதாகவே நம்பிவிட்டான்.

பிறகு, அவன் போனதும், நான் அவரை உள்ளே தூக்கிச்சென்று பார்த்தபொழுது, அவர் மிகவும் அபாய நிலைமையிலிருந்தார். பயத்தினால், அவருக்கு அப்பொழுது பிரக்ஞை இல்லை. சிச்சு அவரைக் கொல்ல நிச்சயித்ததற்குக் காரணமென்னவென்பதை நான் அறியாதவனாகையால், அவர் உயிருடனிருப்பதை அப்பாபி தெரிந்துகொள்ளும்பக்ஷத்தில், மறுபடியும் அவரைக் கொல்ல முயலுவானென்று பயந்து, இதைப் பிறரிடம் சொல்ல எனக்கு இஷ்டமில்லை. அதுவுமன்றி, அவர் யாரென்பதும் அப்பொழுது எனக்குத் தெரியாது. பிறகு, எனக்குத் தெரிந்த ஒரு டாக்டரை அழைத்துவந்து காட்டினேன். அவர், பயத்தினால் அவருடைய (தாண்டவம்ஐயருடைய) மூளை கலங்கியிருப்பதாகவும், அவருக்கு நல்ல நினைவுவர கிட்டத்தட்ட இரண்டு வாரங்களாகுமென்றும் சொல்லவே, அதுவரையில், அவரையே (டாக்டர்) அடிக்கடி வந்துபார்த்துக்கொள்ளும்படி ஏற்பாடு செய்தேன். கடைசியில் இன்று காலமே, அவருக்குக் கொஞ்சம் பிரக்ஞை வந்தபொழுது, தாம் யாரென்பதைச் சொல்லி, உடனே தம் புதல்வனையும் புதல்வியையும் அழைத்துவரும்படி கேட்டுக்கொண்டார். ஸ்வாமி! இவ்வளவே விஷயம். இதில் நான் சம்மந்தப்பட்டது பிசகே. தயவுசெய்து என்னை மன்னித்துவிடவேண்டும்." என்று கெஞ்சினான். ராஜேந்திரன்,

"அப்பா! அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். நீ செய்த உபகாரத்தை நாங்கள் ஒருநாளும் மறக்கமாட்டோம். சரி இருக்கட்டும். இப்பொழுது அவருக்கு

எப்படி இருக்கிறது.'' என்று கவலையுடன் வினவ, அவன்,

"இன்னும் அவருக்கு நல்ல நினைவில்லை. சித்தப்பிரமை கொண்டவர்போலவே காணப்படுகிறார். ஆனால் இனி உயிருக்கு ஆபத்து எள்ளளவுமில்லையென்று டாக்டர் சொல்லிவிட்டார்.'' என்றான்.

கடைசியில், அவர்கள் அவ்வீட்டை அடைந்தபொழுது தாண்டவம்ஐயர் அயர்ந்து நித்திரைசெய்துகொண்டிருந்தார். அவருடைய சரீரம் மிகவும் மெலிந்திருந்தது. முகம் ரோமம் வளர்ந்தும் வெளுத்துமிருந்தது. அவரைக் கண்டதும் ஜானகி அவசரந்தாங்காமல், " அப்பா! அப்பா!'' என்று அழைக்கவே, தம் கண்களைத் திறந்தவர், ராஜேந்திரனையும் ஜானகியையும் பார்த்ததும் ஆவலுடன் தம் கரங்களை நீட்டினார். உடனே, அவ்விருவரும் அவர்மீது பாய்ந்து கட்டிக்கொண்டார்கள்.

நிற்க, சபேசன், தன்னைத்தானே கட்டுப்படுத்தமுடியாதவனாய், அவரை அணுகி, மெல்ல அவருடைய வலது செவியைக் கவனித்தான். அதன் பின்பக்கத்தில், சமையற்கார கிருஷ்ணன் சொன்ன மச்சம் காணப்படவே, ஒரு தரம் பெருமூச்செறிந்தான்.

*   *   *   *   *

முத்துசாமி அய்யர் யார்? அவருக்கும் வக்கில் தாண்டவம்ஐயருக்கும் என்ன சம்பந்தம்? அப்படியே சம்பந்தமிருக்கும்பக்ஷத்தில் தாண்டவம்ஐயர் அதை அவ்வளவு இரஹஸ்யமாய் வைத்துக்கொள்ளக் காரணமென்ன?

இக்கேள்விகளை நம்நேயர்கள்அவசியம் கேட்கக்கூடும்.

தாண்டவம்ஐயர் முழுமையும் சௌக்கியமடைந்த பிறகு, ஒரு நாள் சபேசன், இதைப்பற்றி அவரைக் கேட்டபொழுது, தாண்டவம்ஐயர் கூறியதாவது,

" அப்பா! இது ஒரு குடும்ப இரஹஸ்யம். ஆனால், இனி நான் இதை மறைப்பது முடியாத காரியம்.



சுமார் இரண்டுவருஷகாலத்திற்குமுன், என் தந்தை இறக்குந்தறுவாயில், அவர், என்னை அழைத்து, என்னிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து அதைத் தாம் இறந்தபிறகு வாசிக்கும்படி கூறினார். அதில், அவர் தாம் பரமசண்டாளனென்றும், ஒரு கைம்பெண்ணின் கற்பையழித்தவனென்றும், தம்மால் அக் கைம்பெண்ணுக்கு ஒரு குழந்தை பிறந்ததாகவும், அதை வடநாட்டிலேயே வெகுகாலமாயிருந்துவரும் தம் சிநேகிதர் ஒருவரை வளர்க்கும்படி ஏற்பாடு செய்ததாகவும், இன்னும் அக்குழந்தையைப்பற்றிய பலவிஷயங்களும் எழுதியிருந்தார். தவிர, அக் கடிதம் எழுதும் சமயம், அக்குழந்தையாகிய முத்துசாமி சென்னையிலிருப்பதாகவும், அவன் உத்தியோகமின்றி மிகவும் கஷ்டப்படுவதால், என்னால் முடிந்தவரையில் அவனுக்கு உதவி செய்யும்படியும் கேட்டுக்கொண்டிருந்தார். ஆகவே, முத்துசாமியும் நானும் பார்ப்பதற்கு ஒருவரைப்போலவே இருந்ததற்கு இதுவே காரணம். நான், என் தந்தையின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு, அவன் கேட்டபொழுதெல்லாம் பணம் அனுப்பிவந்தேன். ஆனால் அவன் சென்னையில் இப்பேர்ப்பட்ட அக்கிரமங்களையெல்லாம் செய்துகொண்டு வந்தானென்பதை நான் கடைசிவரையில் அறியவில்லை.

இவ்விஷயம் வெளியாகுமானால், என் தந்தையின் ஆர் நடத்தை வெளிப்பட்டு, பிறர் கண்டபடி பேசக்கூடுமென்று பயந்து, இதை இதுவரையில் இவ்வளவு இரஹஸ்யமாய் வைத்துக்கொண்டிருந்தேன். அப்பா! துஷ்கிருத்தியத்தின் பலனாய்ப் பிறந்தவர்கள் துன்மார்க்கத்திலேயே செல்வது உலக வழக்கம்.

ஜானகி, முதல்தரம் ஆபத்தில் மாட்டிக்கொண்டபொழுது, அவளைக் கெடுக்கத் தீர்மானித்தவன், " என் பெண்ணைக் கெடுத்த அச் சண்டாளனுடைய பெண்ணின் கற்பை இதோ அழித்துவிடுகிறேன்.'' என்று சபதம் செய்துகொண்டானென்பதை அறிந்ததும், என் மனதில் சந்தேகம் தோன்றியது. உடனே சென்னையிலிருந்த என் ஆப்த சிநேகிதன் ஒருவனுக்கு, முத்துசாமியைப் பற்றிய

எல்லாவிஷயங்களையும் விசாரித்து எழுதும்படி, ஒரு கடிதம் எழுதினேன்.

நிற்க, நடுவில் நான் ஒருநாளிரவு இவ்வூரில் என் நண்பர் ஒருவருடைய வீட்டிற்குப் போய்விட்டுச் சுமார் 10 மணிக்கு ஒரு இருள்சூழ்ந்த சந்தின் வழியாய் வந்துகொண்டிருக்கையில், ஒருவன் திடீரென்று என்மீது பாய்ந்து, “ஹா! என் பெண்ணைக் கெடுத்த சண்டாளா! இதோ உன்னைக் கொன்றுவிடுகிறேன்.” என்று சீறியவண்ணம் என்னைக் கொல்ல முயன்றான். அப்பொழுதும், எனக்கு இவ் விஷயத்தைப் போலீஸாருக்குத் தெரிவிக்க இஷ்டமில்லை. ஆனால், என்னை ஒருதரம் கொல்ல முயன்றவன், எப்படியும் கொல்லாமல் விடமாட்டானென்று பயந்து, அதே இரவு நீங்கள் கண்டெடுத்த உயிலை எழுதிவைத்தேன். பிறகு, மறுநாள் மறுபடியும் சென்னையிலிருந்த என் சிநேகிதனுக்கு முத்துசாமியைப்பற்றி கடிதம் எழுதினேன். அதற்குப் பதில் கொலை நடந்த தினம் காலமேதான் வந்தது. அதிலிருந்து முத்துசாமி செய்துவந்த அக்கிரமங்கள் எல்லாவற்றையும் அறிந்துகொண்டேன். உடனே எனக்கு வந்த கோபத்திற்களவில்லை. ஆகவே, உன் தங்கை ராஜம் கண்டுபிடித்த அக் கடிதத்தை எழுதினேன். ஆனால், நான் அதைத் தபாற் பெட்டியில் போடுமுன், முத்துசாமியே கனகபுரிக்கு வந்திருப்பதாகச் செய்திகிட்ட, அதைப் போடவில்லை. நாங்களிருவரும் எப்பொழுதும் இரஹஸ்யமாகவே சந்திப்பது வழக்கம். அவன் அன்று, என் வீட்டிற்குள் புகுந்து, என் நகைகளையே களவாடும்பொருட்டு வந்திருக்கிறானென்பது எனக்குத் தெரியாது. பிறகு அன்று மாலை, நான் நகரமண்டபத்தில் டென்னிஸ் ஆடிக்கொண்டிருக்கையில், சிச்சு என்ற அப்பாவி, என்னை ஏமாற்றி, அழைத்துக்கொண்டுபோனதும் பிறகு நடந்த விஷயங்களும் நீ அறிந்தனவே.”

* * * * *

சிச்சு, தன் குற்றங்களை ஒப்புக்கொண்டு தற்கொலை செய்துகொண்டது நம் நேயர்களறிந்ததே. அது நடந்து



மூன்றுமாதகாலமாய்விட்டது. பிறகு நடந்த விசாரணையில் தாண்டவம்ஐயருடைய மூத்த குமாரனாகிய மூர்த்தி நிரபராதியென்று ரூபிக்கப்பட்டு விடுதலையடைந்து தற்சமயம் தன் தந்தையுடனிருந்ததுமன்றி அவன் அதுவரையில் வெறுத்துவந்த அவனுடைய மனைவியும் அவனிடம் வந்துவிட்டாள். மூர்த்தி, தன் கெட்ட வழக்கங்களை அடியுடன் விட்டு, தான் அதுவரையில் செய்துவந்த காரியங்களுக்காகத் தன்னை மன்னித்துவிடும்படி தன் தந்தையை கேட்டுக்கொள்ளத் தாண்டவம்ஐயர் மன்னித்துவிட்டார் என்பதையும் நாம் சொல்லவேண்டியதில்லை.

ஒருநாட் காலை 10 மணியிருக்கும்.

வக்கீல் தாண்டவம்ஐயரும் சபேசனும் பேசிக்கொண்டிருந்தார்கள். தாண்டவம்ஐயர்,

“சபேசா! இனி என் குழந்தைகளின் விவாஹத்தை ஒத்திப்போட எனக்கிஷ்டமில்லை.” என்றார். சபேசன், புன்சிரிப்புடன், விடையளிக்காமல் அவரை யுற்றுநோக்கத் தாண்டவம்ஐயர், “ஜானகியைப்பற்றிய விஷயம் தான் ஏற்கனவே முடிவாய்விட்டது. இப்பொழுது ராஜேந்திரனுடைய விஷயமென்னவென்று அறியவேண்டும். ஆனால் அவனைப்பற்றியும் நான் கவலைப்படவேண்டாமென்றே நம்புகிறேன்.” என்றார்.

சபேசன், ஒன்றும் தோன்றாமல்,

“நீங்கள் சொல்லுவது எனக்கு விளங்கவில்லையே.” என்றான்.

அச்சமயம், ஜானகி அங்கு வந்துசேர்ந்தாள்.

தாண்டவம்ஐயர், சபேசனைப் பார்த்து,

“சபேசா! நான் ஒருசமயம் உன் தங்கையைப்பற்றி பேசியபொழுது, எனக்கு அவளைப்பற்றியும் பல யோசனைகளுண்டென்று சொன்னதை நீ மறந்திருக்கமாட்டாய். அப்பா! ராஜேந்திரன் அவளை விவாஹம் செய்துகொள்ளச்

சம்மதிப்பாரானால், நான் மிகவும் சந்தோஷப்படுவேன்.'' என்று சொல்லவே, ஜானகி, தன் முகத்தில் ஆனந்தம் கூத்தாட,

"அப்பா! அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவே வேண்டாம். அண்ணா சதா ராஜத்தைப் பற்றியே ஜபம் செய்துகொண்டிருக்கிறான். அவன் அவளை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்படுகிறானென்பதில் சந்தேகமே இல்லை.'' என்றாள்.

தாண்டவம்ஐயர், அவளை அன்புடன் தட்டிக்கொடுத்து,

"பேஷ்! அப்படியா? எங்கே, அவனை அழைத்துக் கொண்டுவா. அவனையே நேரில் கேட்போம்.'' என்று சொல்ல, அப்பெண்மணி வெளியே ஓடினாள். பிறகு தாண்டவம்ஐயர், மறுபடியும் சபேசனைப் பார்த்து,

"அதிருக்கட்டும்; உன் தங்கையின் சேதி யென்ன? அவள் ராஜேந்திரனை விவாஹம் செய்துகொள்ள இஷ்டப் படுவாளென்று உனக்குத் தோன்றுகிறதோ?'' என்று வினவச் சபேசன்,

"அவளுடைய ஜாடையிலிருந்து இஷ்டப்படுவாளென்றே தோன்றுகிறது. ஆனால், பரம தரித்திரர்களாகிய நாங்கள்.......'' என்று அவன் மேலே பேசுமுன், தாண்டவம்ஐயர்,

"அசடே! அசடே! அதைப்பற்றி மறுபடியும் பேசாதே. ஆமாம்; நீ ஜானகியை விவாஹம் செய்துகொள்ளப் போவது அவளுக்குத் தெரியுமோ?'' என்று வினவினார். சபேசன், வெட்கத்துடன்,

"தெரியும்! ஆனால், அதை இன்று காலமேதான் அவளிடம் சொன்னேன்.'' என்றான்.

அச்சமயம், ராஜேந்திரனும் ஜானகியும் அங்கு வர, தாண்டவம்ஐயர், தம் புதல்வனைப் பிரியத்துடன் தம் பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு,

“அப்பா! ராஜேந்திரா! உன் விவாஹத்தையும் ஜானகியின் விவாஹத்தையும் சேர்த்து நடத்த ஆசைப்படுகிறேன். ஜானகியின் விவாஹம் ஏற்பாடாய்விட்டது....” என்று அவர் மேலே பேசுமுன், ராஜேந்திரன், வியப்புற்று,

“என்ன! ஏற்பாடாய்விட்டதா? பையன் யார்?” என்று ஆவலுடன் கேட்க, தாண்டவமய்யர், சிரித்துக்கொண்டே, சபேசன் பக்கம் திரும்பி,

“ஏண்டா! சபேசா! ஆனால் உனக்கும் ஜானகிக்கும் நடந்த விஷயத்தை நீ இன்னும் ராஜேந்திரனிடம் சொல்லவில்லையோ?” என்று வினவினார். சபேசன் ‘இல்லை’ யென்று தன் தலையை ஆட்டவே, அவர், மறுபடியும் தம் புதல்வனை நோக்கி,

“அப்பா! ஜானகியின் புருஷன் சபேசனே.” என்றார்.

இதைக் கேட்டதும், ராஜேந்திரன் ஒரே தாவலாய்த் தாவித் தன் நண்பனை அணைந்துகொண்டான். பிறகு, தன் தந்தையைப் பார்த்து,

“அப்பா! இதையறிய நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்.” என்றான். தாண்டவமய்யர்,

“சரி; உன் விஷயமென்ன?” என்று கேட்க, ராஜேந்திரன், கூச்சப்பட்டவனாய், விடையளிக்காமலிருக்கவே, “அசடே! ஏன் வெட்கப்படுகிறாய்? பெண்ணாய்ப் பிறந்த உன் தங்கை ஜானகிகூடத் தன் காரியத்தைத் தானே ஏற்பாடு செய்துகொண்டாளே. சரியிருக்கட்டும்; சபேசன் தங்கை ராஜத்தை விவாஹம் செய்துகொள்ள உனக்குப் பிரியமுண்டோ?” என்று வினவினார்.

“ராஜம்” என்ற பெயரைக் கேட்டதும், ராஜேந்திரனுடைய முகம் மலர்ந்தது. ஆனாலும் உடனே விடையளிக்கவில்லை. அதைக்கண்ட ஜானகி,

“அப்பா! நீங்கள் அவனைக் கேட்கவும் வேண்டுமா? அதோ அவன் முகத்தில் ‘சம்மதம்’ என்று எழுதி ஒட்டப்பட்டதுபோலிருக்கிறதே.” என்று சிரித்தாள்.

இவ்விதம், அவ்விரண்டு விவாஹங்களும் உடனே நிச்சயம் செய்யப்பட்டன.

அன்று மாலை, ஜானகி, தன் அறையிலுட்கார்ந்துகொண்டு, தன் தோழியை ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமிருந்தாள். சற்றுநேரத்திற்கெல்லாம் உள்ளே வந்த ராஜம், ஓடி ஜானகியின் கரங்களைப் பற்றிக்கொண்டு சந்தோஷமும் பரிஹாஸமும் கலந்த குரலில்,

"ஏண்டி, இதுவரையில் நீ விஷயத்தை என்னிடம் சொன்னாயா? இன்று காலமேதான் அண்ணா (சபேசன்) எல்லாவற்றையும் என்னிடம் ஒப்புக்கொண்டான். அடியே! உஷாராயிரு. நான் சீக்கிரம் உன் நாத்தனாராகப் போவதால், என்னிடம் இனிமேல் ஜாக்கிரதையாய் நடந்துகொள்." என்று கலகலவென்று சிரித்தவண்ணம் தன் தோழியின் கன்னங்களில் விளையாட்டாக இடிக்கவே, ஜானகி,

"ஓகோ! அப்படியா? சரிதான்; உன் அண்ணா பாக்கி விஷயங்களை உன்னிடம் இன்னும் சொல்லவில்லை போலிருக்கிறது. அடியே! நீ என் நாத்தனாரானால் நானும் உன் நாத்தனாரென்பதை மனதில் வைத்துக்கொள்." என்று ராஜத்தை ஆவலுடன் அணைந்துகொண்டாள்.

அதேசமயம் உள்ளே நுழைந்த ராஜேந்திரனும் சபேசனும் ஒரே வாக்காய்,

"ஏண்டி! இதற்குள் நாத்தி சண்டைக்கு ஆரம்பித்துவிட்டீர்களா?" என்று சிரித்தார்கள்.

* * * * *

முற்சொன்ன சம்பவம் நடந்து மேலும் மூன்றுமாத காலமாய் விட்டது.

ஒருநாள் மாலை 5 மணியிருக்கும்.

அச்சமயம் சபேசன், ராஜேந்திரன், பாலகிருஷ்ணன் இம்மூவரும் தாண்டவமய்யருடைய வீட்டு மாடியிலுட்கார்ந்துகொண்டு சம்பாஷித்துக்கொண்டிருந்தார்கள்.

சபேசன், பாலகிருஷ்ணனைப் பார்த்து,



"கிட்டு! நம் மூவரில் நீதான் மிகவும் அதிர்ஷ்டசாலி." என்று சிரிக்கவே, பாலகிருஷ்ணன் ஒன்றும் தெரியாமல்,

"ஏன்? எவ்விதத்தில் நான் உங்களைக்காட்டிலும் அதிர்ஷ்டசாலி?" என்று வினவினான். சபேசன், மேலும் நகைத்து,

"பேஷ்! எப்படியென்று கேட்கிறாய்? சொல்லுகிறேன் கேள். நாம் மூவரும் சமீபத்தில் விவாஹம் செய்துகொண்டோம். நான் ஜானகியை விவாஹம் செய்துகொண்டதால் அடைந்த லாபமென்ன? என் மாமனாருடைய சொத்தில் மூன்றில் ஒருபாகமடைந்தேன். ராஜேந்திரன் என் தங்கை ராஜத்தை விவாஹம் செய்துகொண்டான். அதிலிருந்து அவன் அடைந்த லாபமென்ன? ஒன்றுமில்லை. நீ உன் மாமா பெண் கமலத்தை விவாஹம் செய்துகொண்டாய். ஆனால் நீ அடைந்ததென்ன? கோபாலய்யருடைய முழுச்சொத்தும் உனக்கு வரப்போகிறது. ஆகவே நீ எங்களைக்காட்டிலும் அதிர்ஷ்டசாலியல்லவோ?" என்று கேட்க, பாலகிருஷ்ணன்,

"அடபைத்தியமே! உ[illegible]தே? ஆனால் எனக்கு கோபால[illegible]ப்போகிறதென்று நினை[illegible]கொண்டிருக்கிறாயோ[illegible]டே! என் மாமி காமா[illegible] ஏற்கனவே 5 மாதம் கர்ப்பம். நீ வேண்டுமானால் பார்[illegible]னும் 5 வருஷகாலத்திற்குள் எனக்கு 6 மைத்துனர்க[illegible] இருப்பார்கள்." என்றான்.

சுபம்! சுபம்! சுபம்!

88275

# கஜபதிசிங்

## அல்லது

# மேனாட்டு துப்பறிபவன்

ஆசிரியர் :-கரிசூழ்ந்தமங்கலம், K. சங்கரநாராயணன்

(உரிமை ஆசிரியனுக்கு)

## பழவூர் வைரங்கள்.

கஜபதிசிங் இருஆண்டுகளாக மேனாடுகளில் சுற்றுப் பிரயாணஞ்செய்து துப்பறியுந் தொழிலில் நவீன முறைகளைக் கற்றுக்கொண்டு இந்தியாவுக்குத் திரும்பிவந்தார். சென்னையில் சிந்தாதிரிப்பேட்டையில் நல்லதொரு பங்களாவை வாடகைக்கமர்த்திக்கொண்டு தனது தொழிலை இப்பொழுது நடத்திக்கொண்டுவருகின்றார். சென்றவருடம் கஜபதிசிங்கும் அவருடைய பழைய சீடனும் நண்பனுமான வேணுவும் ஓர் ரகசிய உளவறிய நெல்லைக்கு வந்திருந்தனர். அது பழவூர் ஜமீன்தாரிணி சிவகாமி அம்மாளைப் பற்றியது.

ஓர் மாலை, கஜபதிசிங்கின் அறையை மெதுவாய்த் தட்டினான் வேணு.

"யார்? வேணுவா? எதற்காகத் தட்டுகின்றாய்?" என்று உசாவினார் கஜபதிசிங், கதவைத் திறந்துகொண்டு.

"ஸ்! கூச்சலிடாதே! ஜமீன்தாரிணி வெளியில் வந்து காத்துக்கொண்டிருக்கின்றாள். கடைக் கண்ணால் அவளை நோக்கினேன். நண்ப! மதியை மதியாத மங்கையின் முகவழகு என்னை மயக்கிவிட்டது." என்றான் வேணு.

"போடா முட்டாள்! இதனால்தான் பெரியவீட்டு இளமங்கைகளைக் காணக் கூடாதென்று நான் சொல்லுகிறேன். மெதுவாய் அவளை அழைத்துவா." என்றார் துப்பர்சிங்கம். வேணு வெளியே சென்றான். அழகுவாய்ந்த அணங்கொருவள் உட்புகுந்தாள்.

மோட்டிளங் கொங்கை முடியச் சுமந்தேற
மாட்டா திடை யென்று வாய்விட்டு — நாட்டே
னலம்புவார் கோதையடி யிணையில் வீழ்ந்து
புலம்புமா நூபுரங்கள் பூண்டு.

என்று புகழேந்தி புகழ்ந்துரைக்க வனப்புப் பெற்ற அம் மங்கையின் வசீகரத் தோற்றம் கஜபதிசிங்கின் மனதையே  கலக்கிவிட்டது. கார்மேகம்போல் கருண்ட கேசம்! பவழங்களைப் பழிக்கும் அதரங்கள்! நீலோத்பலப் புஷ்பத்தை யொத்த நேத்திரங்கள்! நாணயமாய் நாகரிகமாய் ஆடை அணிந்துகொண்டுவந்த மங்கையை புன்முறுவலுடன் வரவேற்றார் நமது துப்பார ரத்தினம். ஜமீன்தாரிணி ஓர் ஆசனத்திலமர்ந்தாள். அவளது வலதுகரம் படபடவெனத் துடித்தது.

**கஜபதிசிங்:**—(சாந்தமாய்) நான் குறிப்பிட்டிருந்த நேரம் 10மணி. இப்பொழுதுதான் 10 அடித்து முடிந்தது. உம்மைப்போன்ற நாணயமான ஸ்தீரியை நான் இதுகாறுங் கண்டதில்லை.

**சிவகாமி:**—நீங்கள் சாந்தமாக உரையாடுகின்றீர்கள். எனது கவலையோ கடலினும் பெரிது. நான் 20 நிமிடங்களாக வெளியிற் காத்துக்கொண்டிருந்தேன்.

**கஜபதிசிங்:**—அப்படியா! ஆம். இச்சங்கடத்திற்கு இப்பொழுது என்னசெய்யமுடியும்?

(சிவகாமி அம்மாள் நடுநடுங்குவதை கஜபதிசிங் கவனிக்காதவரில்லை.)

**சிவகாமி:**—துப்பறியும் மாணிக்கமே! என்னுடைய சொந்த அபிப்பிராயத்தின்பேரிலேயே உங்களைக் கலந்துகொள்ள வந்திருக்கின்றேன். உங்களைப்பற்றி ஊரார் புகழ்ந்துரைப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

**கஜபதிசிங்:**—(இடைமறித்து) உம்மைப்பற்றி ஜனங்கள் பேசுவதையும் நான் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

(இதைக் கேட்டதும் சிவகாமி அம்மாளின் முகம் வெளுத்துவிட்டது.)



**கஜபதிசிங்:**—பழவூர் ஜமீன்தார் பரசுராமராஜாவை நீர் மணப்பதற்குமுன், நாடகமேடைகளில் உம்முடைய ஒப்பில்லாத அழகை நோக்கி மயங்கினவர் பலருளர். அப்பொழுது உமது நாமதேயம் மிஸ். சகுந்தலா தேவியல்லவோ? (எனக் கூறினதும், அவளது வதனத்தை உற்றுநோக்கினர்.)

**சிவகாமி:**—(நடுக்கத்துடன்) எனது நாடகமேடை நாமதேயமா!

**கஜபதிசிங்:**—பதறாதே! மிஸ். சகுந்தலாதேவி பழவூர் ஜமீன்தாரிணியானதை ஜனங்கள் அறியார்கள். ஆனால் நானறிவேன். நாவில் அமுதத்தைத் தோற்கடிக்கும் இனிப்புவாய்ந்த நீரூற்றைத் திறந்துவிடும் அழகிய உமது நாடகமேடை நாமதேயத்தை நான் மறக்கமாட்டேன். உமது மணம் மர்மமானது. ஆனால் அம் மர்மங்களைக் கண்டுபிடிப்பது என் வேலை. நான் முயற்சிசெய்யாமலே அம் மர்மங்கள் என் கவனத்திற்கு வருகின்றன.

**சிவகாமி:**—உங்கள் திறம் மெச்சத் தகுந்ததே!

**கஜபதிசிங்:**—மூன்று ஆண்டுகளுக்குமுன் உமது சகோதரன் துரைராஜா, தான் வேலைபார்த்துவந்த சரஸ்வதி பாங்கிலின்றும் ரூ 300000 கொள்ளை அடித்திருக்கின்றான். அப் பணத்தையும் கெட்டவிஷயங்களில் துஷ்டர்களுடன் செலவு செய்துவிட்டதாக அவன் என்னிடங் கூறியிருக்கிறான். நானும் உண்மையென நம்பினேன். அக் குற்றத்திற்காக ஒருவருடங் கடுங்காவல் தண்டனை அனுபவித்துவிட்டு இரு மாதங்களுக்குமுன் சிறையினின்றும் வெளிவந்திருக்கின்றான். (சிவகாமி அம்மாள் கூக்குரலிட முயற்சித்தாள்.) இம் மர்மச் செய்தியைக் கூறவே நீர் இப்பொழுது வந்திருக்கின்றீர். உமக்கு சிரமத்தைக் கொடுக்கக் கூடாதென்றும், நேரம் அதிக விலைமதிப்புள்ளதென்றுமே நானே விஷயங்களைக் கூறிவிட்டேன்.

சிவகாமி :—இவ்வளவுதூரம் நீங்கள் மர்மங்களை அறிந்திருக்கையில், எனது ரகசியம் பகிரங்கமாய்விட்டதென்றே நினைக்கின்றேன்.

கஜபதிசிங் :—உமது கணவருக்கு இச்செய்தி தெரியாதென்றே நினைக்கின்றேன்.

சிவகாமி :—ஆம். உண்மையை உரைக்க நான் அச்சப்படுகின்றேன். இளமையிலேயே நான் ஜமீன்தாருடன் பழகிவிட்டேனாதால், அவருடைய நட்பை விடப் பிரியமில்லை. ஆகவே, ஏமாற்றப்பெயருடன் ஜமீன்தார் அவர்களை மணம்புரிந்தேன். எப்படியாகிலும் ஜமீன்தார் தற்கால நாகரீக மனிதர் போன்று காணப்படவில்லை. எனது சகோதரன் கள்வனே—வழிமறித்துக் கொள்ளையிடுபவன். நானும் ஒருக்கால் அவ்வழியைக் கைக்கொண்டிருக்கலாமென எனது கணவரும் நினைக்கலாம்.

கஜபதிசிங் :—உமது கணவரைப்பற்றி ஜனங்கள் புகழ்ந்துரைப்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேனேயொழிய நான் அவரைப்பார்த்தது கிடையாது. தயை, சாந்தம், ஜீவகாருண்யம் முதலிய அரும் பெருங்குணங்கள் படைத்தவர். இப்பொழுது நெருக்கடியான நிலைமையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறீர்போலிருக்கின்றது. போலீசாரைக் காட்டிலும் நான் நம்பிக்கையுள்ளவனென நீர் நினைத்து வந்திருக்கின்றீர். மறுபடியும் அச் சகோதரனைப் பற்றித்தானே ?

சிவகாமி:—(உண்மையை உரைக்க அவள் சங்கோசப்படவில்லை. ஏனென்றால் எந்தச் செய்திகள் மிகவும் மர்மமானவை என்று அவள் கருதினாளோ அச் செய்திகள் கஜபதிசிங்கிற்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோற் றோற்றுகின்றன.) அச் சகோதரனைப்பற்றித் தான், கஜபதிசிங்! ஆனால் அவனைப்பற்றி நான் குற்றங்குறை கூறமாட்டேன். இருமாதங்களுக்கு முன் சிறையினின்றும் வெளிவந்த எனது சகோதரன் தான் அயல்நாடு



சென்று பிழைக்கப் போவதாய்க் கூறினான். அவனுக்கு அறிமுகமான மனிதர்களின் முகத்தில் விழிக்க இஷ்டமில்லை. மேலும் இவ்விந்தியாவிலே இருக்க அவனுக்குப் பிரியமில்லை. ஆதலால், இச்சந்தர்ப்பங்களின் மத்தியில் அவன் அயல்நாடு செல்வதின்பதே யாவருக்கும் நலம்—எனக்கும், அவனுக்கும். அதற்கு ரூபாய் 20000 வேண்டுமென்றான்.

கஜபதிசிங் :—(இடைமறித்து) அது ஒரு பெரிய தொகையே.

சிவகாமி :—அயல்நாடு சென்று பெரியதொரு வியாபாரக் கம்பெனியில் பங்காளியாகப்போகின்றானாம். அது ஒரு நல்ல யோசனையே. எனது கணவரிடம் அவ்வளவு பெரிய தொகையைக் கேட்க நான் அச்சமடைந்தேன். ஏற்கனவே செலவைக் குறைத்துக்கொண்டு வரும் பழவூர் ஜமீன்தார் மிகவும் செட்டாயிருக்கின்றார்.

கஜபதிசிங் :—உண்மைதான்.

சிவகாமி:—ஆகவே, பழவூர் ஜமீன்தாருடைய வைரங்களில் இறங்கிவிட்டேன். எனது மணத்தின்பொழுது ஜமீன்தாரவர்களால் பத்து வைரங்கள் கொடுக்கப்பட்டன. ஜமீன்தார் அவர்களுடைய முன்னோர்முதற்கொண்டே அவைகள் இருந்துவருகின்றனவாதலால், ஜமீன்தார் அவைகளின்மீது கண்ணுங் கருத்துமாயிருக்கின்றார்.

கஜபதிசிங் :—ஆம். நானும் அவைகளைப் பார்த்திருக்கின்றேன். அவைகள் உயர்ந்த வைரங்கள். ஓர் கழுத்து மாலையாக அவைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகள் இப்பொழுது ஓர் மனிதரிடமிருக்கின்றன. அவைகளைத் திரும்பப் பெற நீர் பெரிதும் விரும்புகின்றீர்.

சிவகாமி:—(பதட்டத்துடன்) நீங்கள் தெய்வீகத்தன்மை பொருந்தியவர்கள். எனது சகோதரனே பணத்தைத் திருப்பிக்கொடுத்துவிடுவதாக ஒப்பந்தம் பேசிக்கொண்டு, வைரங்களை மார்வாரியிடம் அடகுவைக்க எடுக்

துச் சென்றான். மேற்கு ரதவீதி மார்வாரிகள் யாவரும் ஜமீன்தார் அவர்களுக்கு அறிமுகமானவர்கள். ஆகவே, இவர்களிடம் வைரங்களைக் காட்ட அச்சமுற்று சுடலைமாடன்கோவில்தெருவில் பெரியகடை வைத்து வியாபாரம் நடத்தும் ஓர் மார்வாரியை நண்ணினான்.

கஜபதிசிங்: என்ன? சுடலைமாடன்கோவில்தெரு சுந்தரலாலிடமா? அவன் பெரிய திருடன்! திருடர்களின் நண்பன்!

சிவகாமி:— இதோ பாருங்கள். (என்று கூறினதும், தனது மடியினின்றும் ஓர் காகிதத்தை எடுத்தாள். துப்பர் சிங்கம் அப்பத்திரத்தைப் பத்திரமாய்ப் பதட்டமின்றிப் படித்தார்.)

கஜபதிசிங்:—பத்திரம் ஒழுங்காகவே எழுதப்பட்டிருக்கின்றது. மார்வாரி சுந்தரலால் பத்து வைரங்களை அடகாக வைத்துக்கொண்டு ரூபாய் 20000 உமது சகோதரனுக்குக் கடன் கொடுத்திருக்கிறான். பத்திரம் எழுதப்பட்ட தேதியிலிருந்து மூன்றுமாதகாலத்திற்குள் ரூபாய் இருபதினாயிரத்தை நியாயமான வட்டியுடன் சேர்த்து உமது சகோதரன் மார்வாடியிடங் கொடுத்தால், மார்வாடி வைரங்களைத் திருப்பிக் கொடுக்கவேண்டும். இதுவே பத்திரத்தில் எழுதப்பட்டிருக்கும் விடயம்.

சிவகாமி:—(துள்ளிக்குதித்து) நேற்றுமாலை நான் மார்வாரியிடஞ் சென்று அவனுக்குச் சேரவேண்டிய தொகையைக்கொடுத்துவிட்டு வைரங்களைக்கேட்டேன். ரூபாய் ஐம்பதினாயிரம் கொடுப்பதாயிருந்தால்மட்டுமே வைரங்களைத் திருப்பிக்கொடுப்பதாகக் கூறினான். தவிரவும் இன்னும் ஒருவாரத்திற்குள் அப்பணத்தைக் கொடுக்காவிடில் அவன் இவ்விரகசியத்தை ஜமீன்தார் அவர்களிடஞ் சொல்லப்போவதாகவுங் கூறினான்.

கஜபதிசிங்:—அநியாயம்! மார்வாரி கூறினது எனக்கு ஆச்சரியத்தை விளைவிக்காது. அவனுடைய செய்கைகளும்



எண்ணங்களும் எனக்குத் தெரியும். வெகுநாட்களுக்கு முன்னமேயே அவனைச் சிறைக்கனுப்பியிருக்கவேண்டும். விட்டுவிட்டேன். இப்பொழுது செய்யவேண்டிய காரியமென்னவென்றால் நீர் ஜமீன்தாரிடஞ்சென்று நடந்தவற்றை யுரைக்கவேண்டும். அதைச் செய்ய உங்களால் முடியாது. குடும்பவைரங்கள் சுந்தரலால் வீடு சேர்ந்திருக்கின்றனவென்று கேட்டமாத்திரத்திலேயே ஜமீன்தார் அவர்கள் உம்மைச் சுட்டுவிடுவார். இப்பொழுது சங்கடமான நிலைமையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறீர். அவ்வைரங்களை திரும்பி நீங்கள் காண்பீர்களானால் அதுவே பெரிய தவம்.

சிவகாமி:—ஐயையோ! அப்படியானால் நான் இறக்கவேண்டியது உறுதிதான்.

கஜபதிசிங்:—தற்கொலைபுரியவேண்டிய காலங் கடந்துவிட்டது. மேலும் மார்வாரி உங்கள் வைரங்களை இதற்குள் அபகரித்திருப்பான். பணத்தைக் கொடுத்தாலும் நீங்கள் போலி வைரங்களையே அடைவீர்கள். உண்மையான வைரங்களை இனிமேல் காணமுடியுமென்று நான் நினைக்கவில்லை. (சிறிதுநேரம் யோசித்து) இருக்கட்டும்; அவ்வைரங்கள் உங்களுக்கு எப்பொழுது தேவை?

சிவகாமி:—இன்று வியாழனல்லவா? ஞாயிற்றுக்கிழமை மாலைக்குள் வேண்டும். அன்று நாங்கள் மருங்காபுரி ஜமீன்தார் வீட்டுக் கலியாணத்திற்குச் செல்லவேண்டும். அன்று மாலை 5 மணிக்குள் வைரங்கள் வராவிடில் நான் தற்கொலைபுரிந்துகொள்வேன்.

கஜபதிசிங்:—சரி! ஞாயிறு மாலைக்குள் வைரங்களை நீர் அடைவீர். இப்பத்திரமும் அவனுக்குச் சேரவேண்டிய பணமும் என்னிடமிருக்கட்டும்.

சிவகாமி:—எங்கள் பங்களா பாளையம்பதியிலிருக்கின்றன. டெலிபோன் நெ. 715. காலை 10 மணிமுதல் மாலை

4 மணிவரை என்னிடம் விடயங்கள் டெலிபோன் மூலமாகப் பேசலாம். நான் சென்றுவருகின்றேன்.

கஜபதிசிங் அறையில் உலாத்திக்கொண்டிருந்தார். வேணு உள்ளே நுழைந்தான். "வேணு! இப்பொழுது ஒரு பெரிய திருடனுக்கு வலைபோடவேண்டும். சுடலைமாடன்கோவில்தெரு மார்வாரி சுந்தரலால் பெரிய திருடன். அவனுடைய திருட்டுத்தனங்களை போலீசார் அறியாவண்ணம் அவன் முயற்சி செய்கிறான். அவனுடைய கடை ஓர் மர்மக்கட்டிடம். வியாபாரத்தைமாத்திரம் சுடலைமாடன்கோவில்தெருவில் நடத்துகிறானே தவிர அவன் வசிக்குமிடம் தெரியவில்லை. அவனுக்குத் துணையாக நல்லக்கண்ணு என்றொரு பிரபல திருடனிருக்கிறான். அநேக தடவைகளில் போலீசார் அவனுடைய கடையைச் சோதனை செய்திருக்கின்றனர். களவுபோன பொருள் ஒன்றும் அங்கு காணப்படவில்லை. இக்கள்வன் பழவூர் ஜமீன்தாரினியை இப்பொழுது ஆட்டிவைக்கிறான். ஜமீன்தாரினியுடைய சகோதரன் சிறை சென்றவனென்பதை மார்வாரி அறிவான். தவிரவும் நாடகமேடைப் பெயரை மறைத்து சிவகாமி அம்மாள் என்ற பெயருடன் மிஸ். சகுந்தலாதேவி பழவூர் ஜமீன்தாரை ஏமாற்றிக் கலியாணஞ் செய்துகொண்ட விஷயமும் அவனுக்குத் தெரியும். இப்பொழுது ஜமீன்தாரினி ரூ 50000 மார்வாரிக்குக் கொடுக்காவிட்டால் வைரங்களைத் தனக்கு வைத்துக்கொள்ளலாமென நினைத்துக்கொண்டிருக்கிறான். அவனுடைய ஆட்டத்தை அடக்கவேண்டும்" என்று கஜபதிசிங் கூறினார்.

புன்முறுவலுடன் கஜபதிசிங் எழுந்திருந்து ஓர் பெட்டியைத்திறந்து சில ஆயுதங்களை எடுத்துக்கொண்டார். வைரங்களை பரிசோதிக்கக்கூடிய ஓர் கருவியையும் எடுத்துக்கொண்டார்.

பிறகு, அவர் "வேணு! நீ செய்யவேண்டிய காரியமொன்றுளது, பாளையம்பதி சென்று பழவூர் அரண்மனைக்குள் ஒருவருமறியாமல் நுழைந்து, சமீபத்தில் எடுக்கப்பட்டிருக்கும் ஜமீன்தாருடைய புகைப்படமொன்றை



எடுத்துவரவேண்டியது. ஜமீன்தாரைப்போல் நான் மாறுவேடமணிந்துகொள்ளவேண்டும். புகைப்படமொன்றை கைக்கொண்டபிறகு, ஜமீன்தாரை நேரில் பார்த்து, ஏதாவது விடயத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கவேண்டும். பிறகு என்னை வந்து பார்." என்றார்.

வேணு "பலேபேஷ்! இவ்வேலைக்கு இரண்டுமணிநேரம் போதும்." என்று கூறி வெளியே சென்றான். வேணு வெளியே சென்றதும், "மாயத்தை மாயத்தால்வெல்லவேண்டும். மேலும் மார்வாரி சுந்தரலால் பெரிய திருடன்." என்று கூறிக்கொண்டு அவருடைய காரியங்களைக் கவனிக்கச் சென்றார், கஜபதிசிங்.

*　　*　　*　　*

வேணு உள்ளே நுழைந்தான். கஜபதிசிங் தினசரி படித்துக்கொண்டிருந்தார். "ஸார்! வேலை இனிதாய் முடிந்தது. சிறிய புகைப்படமொன்றும் (Cabinet size), அரை டசன் ஜமீன்தார்பெயர் அச்சிடப்பட்ட கடிதங்களும் (Half a dozen visiting cards) கொண்டு வந்திருக்கிறேன். ஜமீன்தாரவர்கள் சாய்மான நாற்காலியில் படுத்துக்கொண்டிருந்தாராதலால் சுகமாய் புகைப்படம் பிடிக்க முடிந்தது. பிறகு அமெரிக்காதேசத்து சுற்றுப்பிரயாணியெனச் சொல்லிக்கொண்டு அவரைப் பார்த்தேன். சில புதிய விடயங்களை ஆராய்ந்து வெளியிட உத்தேசங்கொண்டிருக்கிறேனென்றுங் கூறினேன். இவ்வாறு பேசிக்கொண்டே ஜமீன்தாருடைய உயரத்தை என்னுடைய கருவியால் அளந்துகொண்டேன்." என்று வேணு சொன்ன சமயம், கஜபதிசிங் அவனை தட்டிக்கொடுத்தார். வேணு மறுபடியும் "உங்கள் உயரம் இரண்டங்குலந்தான் குறை. உங்களைக்காட்டிலும் அவருடைய சரீரம் சிறிது பெரியது. ராணுவ பலமும், பேச்சு சாமர்த்தியமும் வாய்ந்தவர். நரைத்த தலைரோமமும், கருமை மங்கின மீசையும் அவரைச் சிறிது கிழவனெனக் காட்டுகின்றன. எப்பொழுதும் நீலநிற ஆடை அணிவதிலும், டெர்பி (Derby) குல்லாய் தரிப்பதிலும் தனக்கு ஆசையுண்டென்றும், அவை

களையே தான் அணிந்துகொள்ளுவதாகவும் என்னிடங் கூறினர்.'' என்றான்.

கஜபதிசிங் அரைமணிநேரம் சிரமப்பட்டு ஆடையணிந்துகொண்டு வெளியே வந்ததும், ''பழவூர் ஜமீன்தாரவர்களா? வாருங்கள்!'' என்று வேணு அழைத்தான்.

வேணு :—ஸார்! உங்களுக்கும் பழவூர் ஜமீன்தாருக்கும் ஒரு வித்தியாசந்தானிருக்கின்றது. அவருடைய கண்கள் சிறிது நீலங்கலந்தனவாக இருக்கின்றன. உங்கள் கண்களை கண்ணாடியால் மறைத்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் வயோதிகதிசையை அடைந்தாலும் ஜமீன்தார் கண்ணாடி அணிந்துகொள்வது கிடையாது.

கஜபதிசிங் :—எப்படியாயினும் நான் ஜயத்துடன் வெளிவருவேனென்று நினைக்கின்றேன். இக்காரியத்தில் அநேக சங்கடங்கள் இருக்கின்றன. நான் இக்காரியத்தின் நிமித்தம் வெளியே சென்றபிறகு உனது இஷ்டப்படி என்னைத் தொடர்ந்துவா. மார்வாரி வீட்டிற்குள் நுழைந்து வைரங்களை கைக்கொண்டபின்பே சங்கடங்கள் இருக்கின்றன. (என்று சொல்லிக்கொண்டு, பெரிய நிலைக்கண்ணாடி முன்பாக நின்றுகொண்டு, தனது அழகைக் கண்டு மகிழ்ந்தார்.)

வேணு :—தலைவரே! இத்தடியையும் எடுத்துக்கொள்ளுங்கள். இதுபோன்ற கருந்தடியொன்றையே ஜமீன்தார் எப்பொழுதும் உபயோகித்துக்கொண்டிருக்கின்றார். மேலும் இத்தடி ஆபத்தான சமயங்களில் உங்களுக்கு உபயோகமாக இருக்கும். இத்தடி உள்ளே குழலாயிருக்கின்றது. அக்குழல் நிரம்ப விஷக்காற்று அடைக்கப்பட்டிருக்கின்றது. எப்பொழுது உங்களுக்கு ஆபத்தென்று தோன்றுகிறதோ, அப்பொழுது தடியின்மேலுள்ள மூடியைக் கழற்றி எறிந்துவிடுங்கள். விஷக்காற்று எதிரியை மயக்கிவிடும்.

வேணுவிடம் விடைபெற்றுக்கொண்டு கஜபதிசிங் கூடலைமாடன்கோவில்தெருவை நோக்கினர். சாவதானமாய் நடந்துசென்ற கஜபதிசிங் விரைவில் சுந்தரலாலின் கடை முன்புறத்தை அடைந்தார். கடைப்பலகையின்மீது வீற்றிருந்துகொண்டு நல்லகண்ணு தன்னை உற்று நோக்குவதை துப்பர் சீமான் பார்த்துக்கொண்டார். ஆயினும் நமது சிங்கம் ஆண்மையுடன் நல்லகண்ணுவை நண்ணி, ''முதலாளி சுந்தரலால் உள்ளே இருக்கின்றாரா?'' என்று வினவினர்.



நல்லகண்ணு :—முதலாளியைப் பார்க்கவந்திருக்கும் நீங்கள் யார்? எதற்காக முதலாளியைப் பார்க்கவேண்டும்?

கஜபதிசிங் :—யாராயிருந்தால் உனக்கென்ன? மேலும் நான் வந்த விஷயம் முக்கியமானதைப்பற்றியாகையால் உன்னுடைய முதலாளியை இப்பொழுதே பார்த்துப் பேசவேண்டும்.

நல்லகண்ணு :—என்னுடைய உத்தரவன்னியில் இக்கட்டிடத்திற்குள் ஒருவராலும் நுழையமுடியாது. உங்கள் பெயரைக் கூறினால்மட்டுமே உள்ளே விடுவேன்.

கஜபதிசிங் :—(யோசித்து) அப்படியானல் பழவூர் ஜமீன்தார் வந்திருப்பதாக சுந்தரலாலிடங் கூறு.

நல்லகண்ணு :—ஜமீன்தாரவர்களா! ஏதோ படபடப்பாய் பேசிவிட்டேன், மன்னிக்கவும். நான் சென்று முதலாளியிடந் தெரிவித்துவிட்டு வருகிறேன். (என்று கூறி உள்ளே நுழைந்தான்.)

ஐந்து நிமிடங்கள் விரைவாய்க் கழிந்தன. வழுக்கை மண்டையும், ஒன்றிரண்டு தந்தங்களிழந்த வாயையும், பருத்த தொந்தியுமுடைய பெரிய மனிதரொருவர் வெளியே வந்தார்.

வந்தவர் :—ஜமீன்தார் அவர்களே! நம்முடைய விஷயம் மர்மமானதால், என்னுடைய தனி அறைக்குச் செல்வதே உசிதம். உங்கள் அபிப்பிராயம் எப்படியோ?

கஜபதிசிங் :—சுந்தரலால் சேட்! நீர் கூறுவது நல்ல அபிப்பிராயந்தான்.

(இருவரும் கடைக்குள் நுழைந்தார்கள்.)

கஜபதிசிங்கும் சுந்தரலாலும் சம்பாஷணை புரியச் சென்ற அறை மர்மமானது. அது கட்டிடத்தின் நடுமத்தியில் அமையப்பட்டிருந்தது. கண்ணாடி ஜன்னல்கள் மிகவும் கெட்டியாய் வைக்கப்பட்டிருந்தமையால் உள்ளே நடக்கும் செயல்களை வெளியிலிருந்து காண்பதரிது. அந்த அறையில் இரு நாற்காலிகளையும் ஒரு மேஜையையுந் தவிர வேறு சாமான்கள் கிடையா. உள் நுழைந்த மனிதர்களிருவரும் நாற்காலிகளிலமர்ந்தார்கள்.

சுந்தரலால் :—ஜமீன்தாரவர்களே! திடீரென்று தாங்கள் இங்குற்றதை நோக்க எனக்குப் பெரும் வியப்பைக் கொடுக்கின்றது. நான் கருதுவதுபோல் வைரங்களைப் பற்றிய விஷயம் பரம ரகசியமல்லவா?

கஜபதிசிங் :—அதைப்பற்றி வாதிக்க இது தருணமல்ல. உங்களுக்குக் கொடுக்கவேண்டிய பணம் எவ்வளவென்பதையும், நீங்கள் அநியாயமாய்க் கேட்கும் துகை எவ்வளவென்பதையும் என்னிடம் ஜமீன்தாரிணி கூறியிருக்கின்றாள். இப்பொழுது உங்களுக்குச் சேரவேண்டிய பணத்தையும், சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டியையுங் கொண்டுவந்திருக்கிறேன். அவைகளைப் பெற்றுக்கொண்டு வைரங்களைக் கொடுங்கள். வீணில் காலதாமதஞ் செய்யவேண்டாம்.

சுந்தரலால் :—(சிரித்துக்கொண்டு) அப்படியே. (என்று கூறி, ஆசனத்தினின்றும் எழுந்திருந்து, பக்கத்து அறையைத் திறந்து ஓர் நகைப்பெட்டியை எடுத்து, துப்பறியும் கனவான்முன் வைத்தான்.) ஜமீன்தார் அவர்களே! இவைகளே உங்கள் வைரங்கள். நன்றாகப் பார்த்துக்கொள்ளுங்கள். எனது கணக்குப்பிள்ளை வட்டியைக் கணக்குப்பார்த்துக்கொண்டிருக்கின்றான். (என்று கூறிவிட்டு வெளியே சென்றுவிட்டான்.)

துப்பார்சிங்கம் தன்னுடைய சட்டையிலிருந்து வைரங்களைப் பரிசோதிக்கக்கூடிய சாதனத்தை(Dischroscope) எடுத்துச் சோதனை பார்த்துக்கொண்டிருந்தார். இவரு



டைய செய்கையைக் கவனித்துக்கொண்டே சுந்தரலால் வெளியே சென்றான். சிறிதுநேரத்தில் டெலிபோன் மணியோசை கேட்டது. துப்பறியும் சிங்கம் இதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

"Hallo! தயவுசெய்து 715 நெ." என்று சுந்தரலால் டெலிபோன் மாற்றும் (Telephone Exchange) ஆபீசுக்குத் தெரிவித்தான். 715 நெ. டெலிபோன் சேர்க்கப்பட்டது.

"715 நெ. டெலிபோனுடன் யார் பேசுகின்றது?"

"நான்தான் சுந்தரலால். பேசுவது யார்? ஜமீன்தாரவர்களா?"

"ஆம். எதற்காகக் கூப்பிட்டது?"

"ஓர் வைரக்கம்மல் ரூ 50000ல் வந்திருக்கின்றது."

"சரி. மாலை வருகின்றேன்."

"Good-bye."

டெலிபோனைத் தூக்கிச் சுவற்றில் மாட்டினான் சுந்தரலால். அச்சமயம் நல்லகண்ணு உள்ளே நுழைந்தான். "நல்லகண்ணு! உள்ளே வந்திருக்கும் ஆசாமி ஜமீன்தாரில்லை. யாரோ துப்பறியும் புலி. தயாராயிரு. எதற்கும் பயப்படக்கூடாது. பத்திரம்." என்று கூறிவிட்டு உள்ளே வந்தான்.

கள்ளனிடங் களவுசெய்யவந்த கஜபதிசிங் மார்வாரியை ஓர் பூதக்கண்ணாடியால் கவனித்துக்கொண்டிருந்தார். உண்மையாக துப்பார்சிங்கம் வைரங்களைப் பரீட்சித்துக் கொண்டிருந்தபோதிலும், அவருடைய பார்வை சுந்தரலால்மீது விழுந்துகொண்டிருந்தது.

சந்தரலால் :—என்ன? ஜமீன்தாரவர்களே!

கஜபதிசிங் :—இவைகள் என்னுடைய வைரங்களல்ல. போலி வைரங்கள். அரைக்காசுக்கும் உபயோகமற்றவை.

சுந்தரலால் :—(வயிற்றிலடித்துக்கொண்டு) அட சிவமே! உங்கள் மைத்துனன் இப்படியா என்னை எமாற்றிவிட்டான். பெரியகள்ளன்! திருட்டுராஸ்கல்! இப்

போலி வைரங்களை என்னிடம் அடகுவைத்துவிட்டு ரூ. 20000 வாங்கிச் சென்றிருக்கிறான். வைரங்களைப் பரிசோதிக்க நான் படித்திருக்கவில்லை. மேலும் ஜமீன்தாரவர்கள் வீட்டு வைரங்களாயிற்றே; அவைகள் போலியாயிருக்குமாவென்று நான் நினைத்தேன். ஜமீன்தாரவர்களே! தயவுசெய்து பணத்தைக்கொடுங்கள். உங்களுடைய வைரங்களை எடுத்துச்செல்லுங்கள். இல்லாவிட்டால் உங்களை நான் கோர்ட்டில் இழுத்துவிடுவேன். பெரிய திருட்டுப்பயல்.

கஜபதிசிங் சிரித்தார். போலி வைரங்களைக் கீழே வைத்தார். "ஸலாம், மார்வாரி! உங்களுடைய தந்திரமல்லவா இது. உண்மையான வைரங்களை ஒளித்துவைத்துவிட்டு என்னிடம் போலிவைரங்களைக் காட்டுகின்றீர்கள். இந்த நகைப்பெட்டிக்குப் பக்கத்தில் வைத்திருக்கும் மற்றொரு நகைப்பெட்டியை என்னிடங் காட்டுங்கள். அப்பொழுது எனது சந்தேகம் முடிந்துவிடும்"—என்று கஜபதிசிங் சாவதானமாய்க் கூறினார். சுந்தரலாலின் நேத்திரங்கள் சிவந்தன. உதடுகள் பதறின. அவன்,

"ஓர் பெரிய சமஸ்தானத்தின் அதிபதியல்லவா நீங்கள். உங்கள் குடும்பமே திருட்டுக் குடும்பம் போலும். சுந்தரலாலை ஏமாற்றமுடியுமென்று நினைக்கவேண்டாம்." என்று கூறிக்கொண்டே, கரத்தைத் தட்டி நல்லகண்ணுவை விளித்தான்.

துப்பறியும் ராஜா மார்வாரியின் எண்ணத்தை அறிந்தார். ஒரே நிமிடத்தில் எழுந்திருந்தார். கதவை நோக்கினார். சுந்தரலாலை நோக்கினார். ஒரே பாய்ச்சல். அறையின் முன்புறத்தை அடைந்துவிட்டார். அறையின் முன்புறக்கதவு கெட்டியாய்ப் பூட்டப்பட்டது.

"சுந்தரலால்! நீ பெரிய திருடனென்பதை முன்னமேயே நான் அறிவேன். சிறிதுநேரத்திற்குமுன் நீ எண்ணியபடி நான் பழவூர் ஜமீன்தாரில்லை. துப்பறியும் கஜபதிசிங்! நீ வெளியே சென்றிருந்தசமயம் என்னிடமிருந்த பூட்டினால் அறையின் பின்புறக்கதவைப் பூட்டிவிட்-



டேன். ஆகையால் உன்னால் [illegible]ழியாய்த் தப்பித்துக்கொள்ள முடியாது. [illegible]தவிலும் இப்பொழுது பூட்டிவிட்டேன்."—என்று கூறிவிட்டு கஜபதிசிங் வாயிலை நோக்கி விரைவாய் நடந்தார். ஆனால், என்ன ஆச்சரியம்! உள்ளே அடைபட்ட மார்வாரி துப்பறியும் சிங்கத்தின் முன்னின்றான்! எவ்வாறு? மர்மக்கதவுமூலமாய்!

"என்னை ஏமாற்றி அடைத்துவிட்டு, வைரங்களை அபகரித்துச் செல்ல உன்னால் முடியாது. பார் இப்பொழுது! உன் மண்டையைப் பிளந்துவிடுகிறேன்." என்று கர்ஜித்துக்கொண்டு சுந்தரலால் துப்பாக்கியை நீட்டினான். ஆனால் துப்பாக்கிக் குதிரையை (Pistol's trigger) இழுக்குமுன் கஜபதிசிங் புலிபோல் பாய்ந்து, சுந்தரலாலை கீழே தள்ளி மார்பின்மீது ஏறி உட்கார்ந்துகொண்டு, நெட்டியை (கழுத்தை) அமுக்கிப்பிடித்துக்கொண்டு, இடப்புறம் வலப்புறமாகக்குத்தினார். சுந்தரலால் மூர்ச்சையானான்.

இதற்குள் மற்ற ஆட்களையும் தனக்கு உதவிசெய்ய கூப்பிட்டுக்கொண்டு பலவித கொடிய ஆயுதங்களுடன் நல்லகண்ணு உள்ளே நுழைந்தான். கடையின் முன்புறத்தில் காட்டுமிருகங்கள்போல் சத்தங் கேட்டது. சரேலென்று கஜபதிசிங் நகைப்பெட்டியண்டை நெருங்கி, தன்னிடமுள்ள ஓர் கம்பியினால் பூட்டைத்தொட்டார். மந்திரம் போன்று பூட்டுத் திறக்கப்பட்டது. அப்பெரிய பெட்டிக்குள் சிறியபெட்டியொன்று காணப்பட்டது. அதையும் அரைவினாடியிற் திறந்தார். அதற்குள் கண்களைக் கவரக்கூடிய காந்திவாய்ந்த பத்து வைரங்கள் காணப்பட்டன. அவைகளை நன்றாகச் சோதித்ததில் உண்மையானவைகளாகக் காணப்பட்டன. அவருடைய ஆனந்தந்தானென்னே! அவருடைய கொவ்வைக் கனிகள்போன்ற அதரங்களினின்றும் ஓர் புன்முறுவல் வெளியே வந்தது.

இதற்குள் நல்லகண்ணுவும் சிலமனிதர்களும் உள்ளே நுழைந்தார்கள். சிலர் கத்திகளை வீசியெறிய ஆரம்பித்தனர். நல்லகண்ணு சுடுவதற்குத் தயாராயிருந்தான். தன்னை ஓர் பயித்தியம் பிடித்தவனென்றும், நகைகளைக்

188775



களவாடக் கடைக்குள் நுழைந்திருக்கவும், தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்காக [illegible]தாகவும், பிற்பாடு போலீசுக்குத்தெரிவிக்கலாமென்ற எண்ணத்தினால் நல்லகண்ணு சுடுவதற்குத் தயாராயிருக்கின்றானென கஜபதிசிங் நினைத்தார். அவர்களிடமிருந்து எப்படித் தப்பித்துக்கொள்ளலாமென்று அவர் யோசித்தார். வேணு கொடுத்த கருங்காலிக்கம்பு நினைவிற்கு வந்தது. அக்கம்பின் மூடியைத் திறந்தார். திடீரென்று விஷக்காற்று துர்நாற்றத்துடன் வெளியே வந்தது. திருடர்கள் யாவரும் மயக்கத்துடன் ஒருவர்மேலொருவராய் விழுந்து மூர்ச்சையாயினர். அப்பொழுது வெளியே குதிரைகளின் காலடிச்சத்தங் கேட்டது. உற்று நோக்கினார் கஜபதிசிங். அதிகங் கூறுவானேன். திருடர் தலைவன் மார்வாரி சுந்தரலாலும் அவனுடைய மனிதர்களும் போலீசார் வசமானார்கள். போலீசார் மத்தியில் வேணு காணப்பட்டான். சரியான சமயத்தில் போலீசாருடன் வந்துதவியதற்காக கஜபதிசிங் வேணுவிற்கு வந்தனஞ்செய்தார். மோசக்காரனை மார்வாரியையும் அவனது சகாக்களையும் பிடித்துக்கொடுத்ததற்காக போலீஸ்இலாகா தலைவர் கஜபதிசிங்குக்கு வந்தனஞ்செய்து சென்றார்.

வேணுவும் கஜபதிசிங்கும் ஜாகையடைந்தனர். டெலிபோன் மூலமாய் துப்பறியும் சிங்கம், "நான் கஜபதிசிங்! உண்மையான வைரங்கள் அகப்பட்டுவிட்டன. மார்வாரி சுந்தரலால் கைதுசெய்யப்பட்டிருக்கிறான். உங்களைப் பற்றிய பிரஸ்தாபமேகிடையாது. ஒருவிதமான சந்தேகமும் கிடையாது. இன்று மாலை இங்குவந்தால் வைரங்களைப்பெற்றுச் செல்லலாம். வந்தனம்." என்று, பழவூர் ஜமீன்தாரினிக்கு செய்தியனுப்பினர்.

* * * * *

பழவூர் ஜமீன்தாரினி சிவகாமிஅம்மாள் வைரங்களைப் பெற்றுக்கொண்டாள். ஆனால் கஜபதிசிங்குக்கு எவ்வளவு பரிசு கொடுத்தாளென்பது தெரியாது.

---